REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—பங்குனி ச, 17-3-'46—ஞாயிறு | இதழ் 33

JAFFNA COLLEGE LIBRARY, MAR 18 1946, VADDUKODDAI, CEYLON.

# உணவுநெருக்கடி தீருமா?

## விவசாயவீரனின் விழல்வேலை

[கொழும்பு நிருபர் கடிதம்]

**யுத்தம் நிகழ்ந்த காலத்தில் உணவுக்கஷ்டம் அவ்வளவாகத் தெரியவில்லை. கையிற் பணம் நிறையவிருந்தது. கடைகளில் உணவுப்பொருள்கள் கிடந்தன. தாராளமாக வாங்கிச் சமாளித்துக்கொண்டு வந்தோம். இப்போது இங்கு அன்ன விசாரம் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமாகவேயிருக்கின்றது.**

"ஒவ்வொருவரும் உணவை எவ்வளவு குறைத்துக்கொண்டால் தம்முடைய ஆரோக்கியம் பாதிக்கப்படாதோ, அவ்வளவு குறைத்துக்கொள்ள வேண்டும். பட்டணங்கள்போன்ற இடங்களிற் பால், காய்கறி, எண்ணெய், பழங்கள் கிடைக்குமாதலால், அத்தகைய இடங்களில் உள்ளவர்கள் தானியங்களின் அளவையும் பருப்புவகைகளின் அளவையுங் குறைத்துக்கொள்ள வேண்டும்.

"பூந்தோட்டங்கள் அனைத்திலும் உணவுப் பொருள்கள் உண்டாக்குதல் அவசியம். இக்காரியத்தை இராஜப் பிரதிநிதிகள், தேசாதிபதிகள், பெரிய உத்தியோகஸ்தர் ஆகியவர்களே முதலில் ஆரம்பித்துச் சனங்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

"எல்லாவற்றிற்கும் மேலாகக் கள்ளச் சந்தைகளும், ஏமாற்றி விற்பதும் வேரறவேண்டும். இந்த உணவு நெருக்கடி சம்பந்தப்பட்டமட்டிற் சகலகட்சியினரும் ஒன்றுசேர்ந்து மனமுவந்து ஒத்துழைப்பதையே தங்கள் பிரதம கடமையாகக் கொள்ள வேண்டும்," எனக் காந்திஅடிகள் உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதைக் கண்டு அனைவருங் கவனிக்க வேண்டிய சில விஷயங்களைக் கூறுகின்றார்.

இங்கு இப்போது எங்களுக்குக் கிடைக்கவேண்டிய கோதுமை அப்பத்தைத்தானும் பெறுவது பரமசங்கடமாக விருக்கின்றது. காலை 6 மணிக்கே வரிசையில் நிற்கும் நிர்ப்பந்தம் ஆரம்பமாகிவிடுகின்றது. தலைக்கு ஒருறாத்தல் பாண் அகப்படுமாகில் அதிர்ஷ்டந்தான். சிலவேளைகளில் அரைறாத்தலைப் பெற்றுத் திருப்தியடையவேண்டும். இதற்கிடையில் இங்கிருந்து நாவலப்பிட்டி, களுத்துறைபோன்றவெளியிடங்களுக்கும் பாண் அனுப்பப்படுகின்றது. மூடை மூடையாக வந்திறங்கிய மாவைக்கண்டு பரிகாசம் செய்தகாலமும் இருந்தது. இப்போது இருட்டுச் சந்தையில் தானும் கோதுமை மா பெறுவது முயற்கொம்பாகி விட்டது!

உவாஷிங்டனில் நிகழ்ந்த ஒரு மகாநாட்டிற் பிரித்தானிய உணவு மந்திரி கீழைத்தேசங்களில் நிலவும் உணவு நெருக்கடி பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். இலங்கையைப் பசிப்பிணி வாட்டிவருகின்றதெனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் விவசாய மந்திரி ஸ்ரீ சேனநாயகாவுக்கும் இலங்கையின் பரிதாப நிலை தெரிகின்றது. இம்மாதம் 24-ந் திகதிவரை ஒருமாதிரிக் காலத்தைக் கழிக்கலாம். அப்புறம் நாட்டில் உணவுக் கட்டுப்பாடு அதிகரிக்குமென அவர் அரசாங்க சபையிற் கூறியிருக்கின்றார். அந்நியநாட்டு உணவுப் பொருள்களிலே தங்கியிருப்பதைவிட்டுச் சொந்தநாட்டில் அதிக உணவு பயிரிட்டு உயிரைப் பிடித்துக் கொண்டிருப்பதற்குப் பிரயத்தனஞ் செய்யும்படி விவசாய மந்திரி உபதேசிக்கின்றார்.

இந்நிலையில் ஸ்ரீ சேனநாயகா விவசாய விருத்திச் சம்பந்தமாகச் செய்த முயற்சிகளையும் அதன் பலாபலன்களையும் நாட்டுமக்களுக்குத் தெரிவிப்பது அவசியமாகின்றது. விவசாய மந்திரியாகவிருந்து இவ்வளவு காலமாக அவர் செய்த நன்மைகள்தான் யாவை? 1931-ம் ஆண்டில் மந்திரிப் பதவிபெற்ற ஸ்ரீ. சேனநாயகா இன்றுந்தான் அதில் ஒட்டிக்கொண்டிருக்கின்றார். "பூமி திருத்தியுண்" என்ற மணிமந்திரத்தை ஓதியவண்ணம் மின்னேரியாபோன்ற திட்டங்களில் நாட்டுமக்களின் பணத்தை வாரியிறைத்தார். எத்தனையோகோடி ரூபாயை நிலத்திற் புதைத்தவிடத்தும் கிடைத்த பலன் எதையுங் காணவில்லை. உணவுப் பஞ்சந்தான் இவ்வருடத்திலே தலைவிரித்துத் தாண்டவம் ஆடப்போகின்றது.

இதுவரை ஸ்ரீ. சேனநாயகா விவசாயத் திட்டங்களைச் சொல்லிச் செலவுசெய்த தொகை எவ்வளவு?

எவ்வளவு பரப்பு நிலந் திருத்தப்பெற்றிருக்கின்றது?

அங்கெல்லாம் வேளாண்மை நடைபெறுகின்றதா?

செலவழித்த தொகைக்கு இதுவரை எத்தனை புசல் நெல் கிடைத்துள்ளது?

இவற்றுக்கெல்லாம் ஸ்ரீ. சேனநாயகா தகுந்த பதில் கூறியே தீரவேண்டும். நாட்டுமக்களின் உயிருடன் இவர் 'சேட்டை' செய்ய முடியாது. பத்திரிகைப் பலத்தைக் கொண்டு ஜாலவித்தைகள் காட்டிவிடலாமென ஸ்ரீ. சேனநாயகா மனப்பால் குடிக்கின்றார்.

நாட்டின் உணவுநிலை மகாமோசமாகி வருகின்றது. இத்தனைக்கும் பொறுப்பாளி அந்த ஹிட்லரா? அல்லது பொறுப்பற்ற அரசாங்கமா? நாட்டுமக்கள் உண்மை நிலையை அறிவதற்குமா அருகதையற்றவர்கள்?

### கள்ளச் சந்தைமீது யுத்தம்.

உணவுப் பஞ்சத்தை ஓரளவு குறைக்க வேண்டுமானுற் கள்ளச் சந்தைகள்மீது அணுக்குண்டைப் பிரயோகித்தே தீரவேண்டும். இதற்கான வேலையில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுவருகின்றது. எவ்வாறு சில உணவுப் பொருள்கள் இருட்டுச் சந்தைகளுக்குள் நுழைந்துவிடுகின்றனவென்பதை அறிவதில் இப்போது உணவுப் பகுதியினர் துரிதமாக முயற்சிசெய்து வருகின்றனர். பொருள்களைக் கொடுப்போரைக் கையும் மெய்யுமாகப் பிடித்துத் தகுந்த தண்டனை விதித்தாலன்றிக் கள்ளச்சந்தைகளை இல்லாமற் செய்ய முடியாது. கொள்ளை விலைக்கு விற்பவர்கள் தங்களை ஆதரிப்பவர்களைப் பார்த்துத்தான் பொருள்களைக் கொடுக்கின்றனர். ஆகவே, பொதுமக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தாலன்றிக் கொள்ளை லாபம் அடிக்குங் கூட்டத்தை அழிக்க முடியாது.

### காங்கிரஸ் கூக்குரல்.

சமீபத்தில் உவ்விடம் வந்த ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் எதிர்கால அரசியல் நிலையைப் பற்றிக் கூறிய வார்த்தைகளை இங்குள்ளவர்கள் பத்திரிகைகளிற் படித்துவிட்டு, "இப்போதுதான் தமிழர் காங்கிரஸுக்கு ஞானம் பிறந்திருக்கின்றதா?" என்று கேட்கின்றனர். முற்போக்கான சிங்களருடன் சேர்ந்து தமிழ் மக்கள் இலங்கையின் பூரண விடுதலைக்கு உழைக்க வேண்டுமென அவர் கூறுகின்றார். அதே மூச்சில் வெள்ளை அறிக்கைக்குச் சாதகமாக வாக்களித்த தமிழ்ப் பிரதிநிதிகளையுங் கண்டித்திருக்கின்றார். இதை வைத்துக்கொண்டு இங்குள்ள வெள்ளைக்காரரின் இருகுதாளப் பத்திரிகையான டைம்ஸ் சுவாரஸ்யமான ஒரு தலையங்கத்தைத் தீட்டியிருக்கின்றது. சரி, வெள்ளை யறிக்கைக்குப் பாதகமாக வாக்களித்த சிங்களர் ஒருவர். அவர்தான் ஸ்ரீ. தஹநாயகா. இந்தியத் தமிழரைத் தவிர்ந்த தமிழர் சிங்களவருடன் சேர்ந்து வாக்களித்து விட்டனர். அப்படியானுல் ஸ்ரீ. தஹநாயகாவே முற்போக்குள்ளவ ராகின்றார். அவருடன் சேர்ந்துதானு இலங்கையின் பூரண விடுதலைக்குப் பாடுபட வேண்டுமென ஸ்ரீ. பொன்னம்பலம் கேட்கின்றார், என்று டைம்ஸ் எழுதுகின்றது. இருந்தாற்போலிருந்து இப்படியெல்லாம் வெள்ளைக்காரப் பத்திரிகை தன்னைக் கைவிடுமென ஸ்ரீ. பொன்னம்பலம் கனவிலுங் கருதியிருக்கமாட்டார்.

சோல்பெரி அறிக்கை இலங்கையைப் படுகுழிக்குட் தள்ளிவிட்டிருக்கின்றது. இலங்கைமக்கள் நிரந்தர அடிமைகளாகி விட்டதைக் கண்ட டைம்ஸ் சோல்பெரி அரசியற் சிப்பத்துக்குத் தூபங் காட்டுகின்றது. ஆகவே, ஸ்ரீ. பொன்னம்பலம் உண்மையாகவே சுதந்திரத்தில் ஆர்வங் கொண்டவராகில் அந்நியரை ஒருபோதும் நம்பக்கூடாது. இலங்கையில் வதியும் இந்தியருக்காக உருகவுங் கூடாது. இந்தியத் தேசீயத் தலைவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெள்ளைக்காரரின் ஆசை வார்த்தைகளுக்குச் செவிசாயாது நாட்டுமக்களின் நம்பிக்கையைப் பெற்று அரசியல் அரங்கத்தில் அடியெடுத்து வைக்கவேண்டும். இத்தனைக்கும் பழுத்த அரசியல் வாதிகளையும் உண்மையான தேசபக்தர்களையும் அணுகி முற்போக்கான திட்டங்களை வகுத்து நாட்டின் விடுதலைக்கு வீதி சமைக்க முயல வேண்டுமல்லவா?

### இளைப்பாற முடிவு

கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவராக விருக்கும் ஸ்ரீ கனகரத்தினம் இளைப்பாறப்போகின்றார். அரசாங்கசபை, அந்நிய நாட்டிலிருந்து புதிய 'ஒடிற்றர் ஜெனறல்' ஒருவரை இறக்குமதி செய்யத் தீர்மானித்துவிட்டது. ஆகவே, ஸ்ரீ கனகரத்தினம் அவர்கள் இளைப்பாறுவதைத் தவிர வேறு வழியில்லை. [illegible] இப்போது இவருக்கு வயது 54.

## சீரான குடிசன மதிப்பு

### சிறந்த ஆட்சிக்கு அஸ்திபாரம்

— டொக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் —

**இலங்கையிற் குடிசன மதிப்பு மும்முரமாக நடைபெறுகின்றது. உண்மையான விபரங்களை உதவி அரசாங்கத்துடன் ஒத்துழைத்து இவ்வேலையை வெற்றிகரமாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இது சம்பந்தமாக டொக்டர் ஜென்னிங்ஸ் கூறும் சில யோசனைகள் ஊன்றி உணரத்தக்கன.**

உண்ண உணவும், உடுக்கத் துணியும் வசிப்பதற்கு இல்லங்களும், இலங்கையில் எவ்வளவு தொகையினருக்கு வேண்டுமென்பது இங்குள்ள ஒருவருக்குந் தெரியாது. இந்த விபரங்களை நாங்கள் அறிவது முக்கியமாகின்றது. இது இலகுவான விஷயம். இலங்கையிலுள்ள ஆறு கோடி மக்களுக்கும் இருபது கோடி கொத்து அரிசியும் மாவும் பிரதிவாரமும் தேவைப்படும். இதை யாரோ ஒருவர் எங்கிருந்தோ பெறவேண்டியிருக்கின்றது. இது மாத்திரமல்ல; ஜனத்தொகையை அறிந்தால் மக்களின் ஆரோக்கியத்தைப்பற்றியுஞ் சிறிதளவு தெரிந்துகொள்வது சாத்தியமாகின்றது. ஏனையநாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் மரண விகிதம் மிக உயர்ந்ததாகவே காணப்படுகின்றது.

வருடமொன்றுக்கு ஆயிரத்தில் எத்தனைபேர் இறக்கின்றனர் என்பதையறிந்து அதிலிருந்தே மரண விகிதம் கணிக்கப்படுகின்றது. இறப்புப் பதிவு இடாப்பிலிருந்து மரணத் தொகையைத் தெரிந்துகொள்ளலாம். ஆனல் ஜனத்தொகையை நாங்கள் சுலபமாக அறிய முடியாது. நிதானமாக மதித்தாலன்றி உண்மையான தொகையைத் தெரிந்து கொள்வது சிரமம். இப்போது இருவித மதிப்புகள் உண்டு. தலைமைப் பதிவுகாரராற் கணிக்கப்பட்டதொகை ஒன்று. மற்றது உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி கண்ட தொகை. இரண்டுக்குமுள்ள வித்தியாசம் 3,50,000.

இன்றைய ஜனத்தொகையை மட்டும் அறிந்தாற் போதாது. 1956-ம் 66-ம் 76-ம் ஆண்டுகளில் ஜனத்தொகை எவ்வளவாகுமென்பதையுந் தெரிய விரும்புகின்றோம். விவசாயத்தைச் சீர் செய்வதற்கு இது மிகவும் உதவுகின்றது. 1966-ம் ஆண்டின் ஜனத்தொகையைக் கணிப்பதற்கு சகல விதமான கணக்குகளும் தேவை. உதாரணமாக உமது மனைவி எப்போது முதற் சிசுவைப் பெற்றூர் என்பதை அரசாங்கம் அறியவிரும்புகின்றது. ஏனெனில் இன்றைய தாய்மாரிலேயே நாளைய சந்ததி தங்கியிருக்கின்றது. இப்போதுள்ள தாய்மாரின் தொகையைக்கொண்டே எதிர்காலமக்களின் தொகையைக் கணிக்கமுடியும். மக்களைப் பெறத்தக்க தாய்மார்களின் தொகையையும் வருடமொன்றுக்கு எத்தனை பிள்ளைகளைப் பெறுகின்றனர் என்பதையும் குடிசன மதிப்புக்குப் பின்னர் அறிவோம்.

எந்த வயதிற் பெண்கள் மக்களைப் பெறுகின்றனர் என்பதை எதற்காக அறியவேண்டுமென நீங்கள் கருதலாம். வயதுமுதிரவே பிறக்கும் பிள்ளைகளின் தொகையுங் குறைகின்றது. ஆகவே உண்மையான வயதை ஒவ்வொருவருந் தெரிவிப்பது மிக மிக முக்கியம்.

கல்வி விசாரணைச்சபை அங்கத்தவர்களில்நானும்ஒருவன். கட்டாயக்கல்வியை விசாரணைச்சபை வற்புறுத்தியிருக்கின்றது. பள்ளிக்கூடத்தைவிட்டு நீங்கும்வயதை அரசாங்கசபை பதினூறாகஉயர்த்தியிருக்கின்றது. ஆனுற் பதினுன்கு வயது நிறைந்த அநேகபிள்ளைகள் கல்வி வாசனையின்றி யிருப்பதை அரசாங்கசபை உணரவில்லை. பதினுன்குக்கும் பதினுறுக்குமிடையிலுள்ள பிள்ளைகளின் தொகையையும் அரசாங்கசபை அறியவில்லை. இவர்களில் எத்தனைபேர் கல்வி பயிலுகின்றனர், எத்தனைபேர் சும்மாவிருக்கின்றனர் என்பதும் இவர்களுக்குத்தெரியாது. எத்தனை பள்ளிக்கூடங்கள் நிறுவவேண்டும், ஆசிரியர்கள் எத்தனைபேர் தேவை என்பனவற்றையும் அரசாங்கம் கணிக்கவில்லை.

மதிப்பெடுப்பு இத்தனை விபரங்களையுந்தர முடியாது. ஆனுற் கிடைக்கும் எண்களை ஆதாரமாகக்கொண்டு ஒவ்வொரு பிரிவிலுமுள்ள பிள்ளைகளின்தொகையை ஓரளவுக்கு அறியலாம்.

1921-ம் ஆண்டில் எடுத்த குடிசனமதிப்புத் தவறுனது. முதலாவது அநேகர் தங்கள் வயதை வேணுமென்றே தவருகக் கூறினர். வேறுசிலருக்கு வயதைச் சரியாகக் கணித்துக் கூறவேண்டுமென்ற அக்கறை துளிகூட இருக்கவில்லை.

குடிசனமதிப்புப் பகுதித் தலைவர் அறிக்கை சமர்ப்பிக்கச் சில வருடங்கள் செலும். ஆனுல் இவ்வேலை நிறைவு பெற்றதும் இவ்வறிக்கை நாட்டு மக்களின் முதன்மையான சமூக சாதனமாகவே அமையும். இப்போது வெளியிடப்பட்டிருக்குஞ் சில விபரங்களைப் பார்த்துப் பிறதேசத்தார் பிரமித்துவிடுகின்றனர். பொருளாதார நிலையைச் சீராகக் கணிப்பதற்கு நிதானமான விபரங்கள் அத்தியாவசியமானவை.

நாட்டிற் தேசீயஉணர்ச்சிவளம்பெறும்போது அந்நாட்டின் சரித்திரமும் ஓரளவுக்குத் திரித்துக் கூறப்படுகின்றது. தேசவிருத்தாந்தம் சரியானமுறையில் அமையாதவிடத்து நாட்டின் பொருளாதார நிலையையுஞ் செம்மையாகக் கணிக்கமுடியாது. இலங்கையின்நிலையும் இதுதான். புதிய அரசியல்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு நாட்டின் சகல விபரங்களையும் அறிவது அவசியம்.

அப்பழுக்கற்ற விபரங்களைக் கொண்டே நல்ல அரசாட்சியை ஏற்படுத்தலாம். மதிப்பெடுப்பு, நிதானமான விபரங்களுக்கு அஸ்திவாரம். ஆகவே சிறந்த ஆட்சிக்கும் அதுவே நிலைக்களமாக அமைகின்றது.

**GANDHIJI**
**HIS LIFE AND WORK**

Edited by D. G. Tenduekar, M. Chalapathi Rau
Mridula Sarabhai Vithalbhai K. Jhaveri

With an Introduction by 'Jawaharlal Nehru'
75-th BIRTH-DAY VOLUME

A book which gives one a complete idea of the ideals and principles for which "Mahatma Gandhi" stands for.

It contains a full chronology of important dates connected with the life of Mahatma illustrated both in colour & Half-Tone.

**Excellent get up :: :: Price Rs. 15/=**

Only a limited number of copies available.

*Apply in time to avoid disappointment:*

S. S. SANMUGANATHAN & SONS,
JAFFNA

[2680]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ☼

● வீரர் வணக்கம் தமிழ்நாட்டிற்குப் புதியதல்லவாம்.

☼ இன்றும், என்றும் தமிழர்கள் உண்மையான வீரர்களைப் போற்றி வருகின்றனராம்.

☼ இதனுல், வீர புருஷர்களை மாத்திரமல்ல வீரத் தாய்மார்களையும் வணங்கி வருகின்ருர்களாம்.

☼ கீழைத்தேசமே இத்தகைய வீரர்களை உலகுக்களித்து யாவருக்கும் முன்மாதிரி காட்டியிருக்கின்றது.

☼ பெரும்பான்மையும் சமயத்தொண்டு புரிந்து மக்களை நல்வழிப்படுத்திய வீரர்களையே ஆதிகாலந் தொடங்கிப் போற்றி வந்தனராம்.

☼ இவற்றைப் பழைய சங்க இலக்கியங்களிலும், சமய நூல்களிலும் பரக்கக் காணலாம்.

☼ மக்களின் ஈடேற்றமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தவர்களை என்றென்றும் நினைவிலிருத்தவே இவ்வீரர் வணக்கம் ஆரம்பிக்கப்பட்டதென்னலாம்.

☼ இவர்களை நினைவிலிருத்துவதோடமையாது அவர்கள் புகட்டியநீதிமொழிகளையும்,காட்டிய நல்வழிகளையும் ஒவ்வொரு சந்ததியாரும் பின்பற்றவேண்டும் என்பதே இதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

● இம்மாதிரியான வீரர்கள் உயிருடன் இருக்கும் வரையும் மக்கள் பெரும்பாலும் இவர்களைப் போற்றுவதில்லையாம். இது உலக இயற்கையே.

☼ ஆனுல், உலகம் போற்றும் உத்தமர் காந்திஜியவர்கள் இதிற் புறநடையாக விருக்கின்ருராம்.

☼ இவரின் எதிரிகள் கூட இவரை உத்தமர் என்று வாய் கூசாது சொல்லிவிடுகின்ருர்களாம்.

☼ இவ் வீர மகானைக் கடவுளின் அவதாரமென்றும், கண்கண்ட தெய்வம் என்றும் பல மேதாவிகள் எண்ணுகின்ருர்களாம்.

● இது மாத்திரமல்ல, பற்ணுவிலுள்ள ஸ்ரீபுரி என்னுமிடத்தில் மகாத்மாஜியின் உருவச் சிலையைப் பிரதிஷ்டை செய்து ஒரு கோயிலும் அமைத்துள்ளார்களாம்.

☼ அவ்வூர்க் கிராமவாசிகள் ஆற்றெழுக்குப்போன்று இடைவிடாது சென்று இம்மகானுக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்தி வருகின்றனராம்.

☼ இக்கோயிலில் நடைபெறும் கிரியைகள் கீதா பாராயணமும், நூல் நூற்றலுமாம்.

● இத்தகைய கோயில்கள் பாரத நாடெங்கும் பன்னூற்றுக் கணக்காகக் கட்டப்படவேண்டும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமுமாகும்.

☼ இதனுல், மகாத்மாஜியை யாவரும் கடவுளாகப் பூஜிக்க வேண்டுமென்பது நோக்கமல்ல;

☼ 'பஞ்சமும் நோயுநின் மெய்யடியார்க்கோ?' என அன்று பாரதியார் புலம்பியதை இன்று பாரத நாடெங்கணும் இல்லாமற் செய்துவிடலாம்.

☼ இக்கோயில்களில், தத்தம் சமய குரவர்களும், நாயன்மார்களும் கூறிச்சென்ற 'கீதை' போன்ற வசனங்களை மக்கள் பாராயணஞ் செய்யலாம்.

☼ காணிக்கைகளையும் இராட்டையில் நூற்ற நூலாகவோ, கைத்தறியில் நெய்த துணியாகவோ அர்ப்பணஞ் செய்துவிடலாம்.

☼ இப்படியாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்ற கோயில்கள் ஒவ்வொரு மக ஆலயங்களிலும் புறம்பாகவும் அமைக்கப்படலாம்.

☼ அப்படியாயின் 'பாரதநாடு பழம் பெருநாடு' ஆக மறுமுறையும் திகழும்,


GOOD NEWS

BOOKS FOR SCHOOLS

| | |
|---|---|
| Systematic Qualitative Analysis by Caven | Rs. 5/95 |
| Notter & Firth's Hygiene-New & Revised Edition | Rs. 11/25 |
| Collin's Popular Dictionary - New Clear Type Edition | ... Rs. 4/25 |
| Biology for Medical Students by Hentschel & Cook | ... Rs. 16/80 |
| Text-book of Botany by Lowson & Sahni | ... Rs. 8/50 |
| A Class book of Botany by Dutta | ... Rs. 8/25 |

SANMUGANATHANS' MISCELLANY

| | |
|---|---|
| English Social History-Chaucer to Victoria by Trevelyan ... | ... Rs. 17/— |
| Parliament - Jennings ... | ... Rs. 20/— |
| The Constitutional Problems in India by Coupland ... | ... Rs. 11/— |
| Evolution of England by Williamson | ... Rs. 11/25 |
| Foot Prints on the sands of Time by Pearce | ... Rs. 2/75 |
| Netaji Bose - a Life sketch with attractive illustrations | ... Rs. 4/— |
| Prison Days - Vijaya Lakshmi Pandit | ... Rs. 4/30 |

The Empire at work series :

| | |
|---|---|
| Our letters in the Post | -/90 |
| Rubber and its many uses | -/90 |
| Cocoa and Chocolate | -/90 |
| The arm of Law | 1/15 |
| The Story of Gold | -/90 |
| The Story of Transport | -/90 |

Studies in Tamil Literature and history by Ramachandra Dikshitar ... Rs. 6/-

An Excellent Range of New Books
JUST RECEIVED

*CHOICE is entirely YOURS.*
*A visit will convince you.*

**S. S. Sanmuganathan & Sons**
PUBLISHERS & BOOK SELLERS
VANNARPONNAI, :: :: JAFFNA.

[ 2659 ]



புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக
எல்லாப் பயிர்களுக்கும்
வேண்டிய பசளைவகைகளை
விநியோகஞ் செய்பவர்களாக
இருந்து வருகிருர்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு
அவசியமான பசளைகளைப்பற்றி
விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO
COMMERCIAL CO., LTD.
Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2653]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனமுறை யொழிய வழி

இனமுறை ஒழியவேண்டாமென எந்தச் சீர்திருத்த இளைஞனுஞ் சொல்லான். மணமுறை மாற்றத்தை (கலப்பு மணம்) வரவேற்காத அறிஞருமில்லை. ஆனல் இவண் நாம் ஆராயவேண்டுவது இனமுறை யொழியக் கலப்புமணம் காரணமாகுமா? என்பதேயாகும். அதுதான் இல்லை.

இனமுறையை ஒழிப்பன மக்களிடம் உண்மையான பொருளாதார முன்னேற்ற (சமத்துவம்) மும், மூடநம்பிக்கையை யழிக்கும் மெய்யறிவினைத் தூண்டும் கல்வி வளர்ச்சியுமேயாகும். ஒரு நீர்த்தேக்கம் உள்ளது. அதனிடையில் அணைகள் கட்டிப் பல பிரிவுகளாக்கி விட்டனர். இப்போது பிரிந்த நீர்ப்பகுதிகள் சேரவேண்டும் எனச் சொல்லிக் கொண்டோ, அன்றிச் சட்டம் செய்துவிட்டோ, சும்மாவிருந்தால், ஒன்ருய் விடுமா? அதுபோலத்தான் பொருளாதார, அறிவு மேம்பாட்டால் (உயர்வு தாழ்வு) பிரிந்த சாதிகள் ஒன்று சேரவேண்டும், கலப்பு மணம் வேண்டும் என்பதும். ஆனல் நீர்மட்டத்தை அணைகளின் அளவிற்குயர்த்திஞல், தானே கலந்துவிடுமல்லவா? மக்களையும் பொருள், அறிவு இவற்றில் உயர்த்திவிட்டால் தானே சாதிகள் ஒன்ருகி, (அழிந்து) விடும். அங்கு நடப்பதெல்லாம் கலப்பு மணந்தானே? பின் அதைப்பற்றித் தனி முயற்சி ஏன்?

எப்படி அறிவு வளர்ச்சிக்குக் கல்வி வளர்ச்சி நேரான காரணமோ அப்படியே சாதியொழியப் பொருள், அறிவு சமத்துவமும் நேரான காரணங்களாம். எந்தக் காரணத்திஞல் ஒன்று தோன்றியதோ அந்தக் காரணத்தையழித்தாலன்றி அதனையழிக்க முடியாது என்பதோர் உண்மை. தொன்று தொட்டு, இன்று வரையுங்கூடச் சமூகப் பிரிவுகள் பொருளாதார, அறிவு ஏற்றத்தாழ்விலேயே தோன்றி, நிலைத்துள்ளன. பண்டு நான்கு பிரிவுகளுள் வணிக, அரசப் பிரிவுகள் பொருளாலும், அந்தணர் அறிவாலும், வேளாளர் இரண்டும் இன்மையாலும் பிரிந்தனர்.

இன்றும் விஞ்ஞான அறிவும், தொழில் வாணிப முதலாளிகளின் பொருளாதார உயர்வுமே உலகச் சமூகங்களைப் பிரித்துள்ளன. இதனை மறுக்க முடியுமா? நேரே காண்பதுதானே!

இங்ஙனம் பொருளாதார அறிவு வேறுபாட்டால் பிரிந்த சாதிகளை, அவற்றையுயர்த்துவதன் மூலமே அழிக்க முடியுமெனில் அதனை மறுப்பது ஆராய்ச்சியோ? அறிவோ? உண்மைச் சீர்திருத்த உணர்ச்சியோ ஆகுமா?

மற்றவகை முயற்சிகளெல்லாம் 20-ம் நூற்ருண்டின் முயற்சியல்ல. இன்றைய பொருள், அறிவுத் துறையில் சமானமான ருஷியா மிகப் பெரும்பாலும் இன வேறுபாடுகளைக் களைந்து விட்டதென்பதில் ஐயமில்லை. அவர்கள் உள்ளத்தே சாதிப்பகை மடிந்ததென உறுதி கொள்ளலாம். இம்முறையே உண்மையான அடிப்படை மாற்றமாகும்.

மணமுறை மாற்றத்தால் இனமுறை யழியாமையையும் காண்கிருேம்.

மக் ஆர்தர் தாய் ஜப்பானிய மாதாம். தந்தை அமெரிக்கர். அதனுல் மக் ஆர்தர் இன, மத வேறுபாடற்றிருப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்கராயும், கிறிஸ்துவராகவுமே இருக்கிருர். கலப்பு மணத்தில் செல்வாக்கும், சிறப்புமுடைய கணவன் (அ) மனைவியின் இனம் பெரும்பாலும் வழங்கப்படுதலையே காண்கிருேம். ஆனல் சமூகத்தில் பெரும்பான்மையோர் கலப்புமணம் புரிந்தால் இந்நிலை இராதெனலாம். அந்நிலைதான் வெறும் கலப்பு மண முயற்சியால் வாராது. பொருளாதார உயர்வாலேயே ஆகுமென்கிறேனே!

இன்னென்று சாதிப்பிரிவு, இனத்திற்குள்ளேயே மணம் இவற்றுள் எது வரலாற்றில் முன்னர் நிகழ்ந்திருக்கலாம்? அதனை அறிந்தால் அதுவே மற்றதற்குக் காரணமென முடிவு கட்டிவிடலாமல்லவா?

**மு. கோவிந்தசாமி**
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

முன் தோன்றியதுதானே பின்னதற்குக் காரணமாக முடியும்? அந்தக் காரணத்தைத் திருத்திஞல் நம் செயல் முடிந்தது. வரலாற்றிலே முதலில் சாதிகள் பிரிந்ததெனவே கூறப்படுவதன்றி, மக்கள் குறித்த கூட்டத்தில் மணமுடித்துக்கொள்ள அதன்வழி அப்படியே சமூகங்கள், பிரிவுகள் அமைந்தனவாகக் கூறக் காண்கிருேமில்லை. மார்க்ஸ் முதல் சாதாரண மாணவனும் சாதிப்பிரிவு முதல் என்பதனையும், அது பொருளாதாரத்தைப்பற்றியது எனவும் நன்கு உணர்ந்துள்ளனர். ஆதலின் முதல் தோன்றிய; காரணமாய இனப்பிரிவை யழித்துப் பொருளாதார அறிவு சமத்துவம் வேண்டும். அதற்குச் சிறப்பாக இந்தியாவில் 'சுதந்திரம்' வேண்டும். உரிமை வேண்டும்.

இதனை, நாம் பெரும்பாலும் படித்தவர்களையும், சாதி வேறுபாடற்ற மனமுடைய வர்களையும் உள்ளத்தே கொண்டு ஆராய்கிருேம். அது வழியன்று. கல்வியறிவில்லா மூடநம்பிக்கை உருவாய, சாதிப்பிரிவினைப் பழுத்த சாதாரண மக்களை, நினைத்துப்பார்க்க வேண்டும். அப்போது நன்கு விளக்கம் ஆகும்.

இப்போது கலப்பு மணத்தை வரவேற்கும் இளைஞர் பெரும்பான்மையோர்.

ஆனல் இவரெல்லாம் கலப்பு மணத்திற்குத் தயாராக இருக்கின்றனரா? இல்லை. ஏன்? ஆராய்ந்து பாருங்கள். அவர்கள் பொருளாதாரத்திற்குத் தம் பெற்ருேரை, காப்பாளரைச் சார்ந்துள்ளனர். தம் வாழ்க்கைக்கு வேண்டும் பொருளை நாடு உதவத்தகும் ஏற்பாட்டினைச் செய்துள்ளது என்ற உறுதியிருக்குமாஞல் யாவருஞ் செயலில் இறங்குவார்கள் என்பதில் ஐயமில்லையல்லவா? ஆனல், பொருளும், அறிவுமுடைய குடும்பத்தினரும் பலர் கலப்பு மணஞ் செய்வதில்லை. காரணம் மூடநம்பிக்கை, தம்மின் உயர்ந்தோராகக் கருதும், பொருள், அறிவு உயர்ச்சியுடையோர் செல்வாக்கிற்குக் கட்டுப் படுதலேயாகும். அவர் ஓர் வீண் மூடநம்பிக்கையுடையராயிருப்பார். இப்படி ஒருவரை யொருவர் சார்ந்துதான் இன்று சமூகம் இந்நிலையில் உள்ளது. இது எப்படி மாறும்? பெரும்பான்மை மாறவேண்டும். அன்று சிறுபான்மை மாறித்தானே யாகவேண்டும். இன்று பெரும்பான்மையோர் செல்வம் அறிவு இவற்றில் தாழ்ந்துள்ளமையாற்ருன் அதன் காரணமாய சாதிகள் மலிந்துள்ளன. அப்பெரும்பான்மையோர் உயர்ந்தால் சாதிகள் ஒன்ருும். அன்று சிறுபான்மை அதன் போக்கை விட்டுவிடும். வேறுவழி?

நன்மையோ, தீமையோ, பெரும்பான்மையிடம் பற்றுவதே நிலைப்பதென்பது உலக உண்மை. இன்று அநாகரீகமும், அடிமைப்படுத்தும் காட்டுமிராண்டித்தனமும் உலகில் பெரும்பான்மையான, அறிஞரென மதிக்கும் மக்களிடம் உண்மையாற்ருல் உலகு இந்நிலையுற்றது. சாதிகளும் அப்படியே. அப்பெரும்பான்மையினர் நன்மையில் உயரும் வழியைச் செய்துவிட்டால், தீய சாதிகள் சிறுபான்மையோர் காப்பிற்குள் புகுந்தாலும் நீடிக்க இயலாதல்லவா?

ஆகலின், பெரும்பான்மையான மக்களை உயர்த்தி அறிவு மேம்படச் செய்வதே இனமொழிதற்குக் காரணமாம். அன்று முயற்சியின்றியே கலப்பு மணம் நிகழும். வீணே கலப்பு மணம் வேண்டும் எனச் சொல்லிக்கொண்டிருப்பதால் செயல் நிறைவேருது என்பதுறுதி. செயலின்றி வெறுஞ்சொல் என்றும் ஆக்கந்தராது. அச்செயலே முதலில் நாட்டில் பொருளை வளர்த்து அறிவைப் பெருக்கிப் பின் சாதியழிவைக் காண்பதாகும். அதற்கு உரிமை வேண்டும். எழுக! செயலாற்றுக! வீண்பேச்சாற் பயனென்ன?

## இன்றைய தமிழன்

[வித்துவான், க. வேந்தனர்]

தன்னலமே பெரிதாகக் கருதியிந்த உலகில்
 தவிக்கின்ற மக்கள்தமை அவிக்கின்ற கொடியோர்
கன்னல்குடித் திறுமாக்கும் பெருமிதப்பேய் வாழ்வைக்
 கண்டிகழுந் தொண்டரடி கைதொழுவன் யானே.

கனிப்பிழிவுங் கொழுந்தேனுங் கருக்கண்டிற் கலந்து
 காய்ச்சியிளம் பதத்தெடுத்த கட்டியுடன் பாகின்
இனிப்பழைந்த பாலடிசில் அருந்தியெமக் குதவா(து)
 எடுத்தெறிமின் எனத்தருக்கி இருப்பாரை மதியேன்.

தனித்திருந்து தானடைந்த துன்பமெலாஞ் சாற்றித்
 தலைவிதியோ எனப் புலம்பித் தளர்ச்சிமிகக் கொண்டு
பனிக்குளிருங் கொடுவெயிலும் பசிக்கனலுங் கொல்லப்
 பதைபதைக்கு மேழைக்கோர் பணங்கொடுத்தார்க்
 [கடியேன்.

## சீதையின் பிரலாபம்

**த. யோநாதன்**

அரக்கியரால் வருத்தப்பட்டு மனம் மிகக் கலங்கிய சீதை, திரிச்சடையால் சிறிது தேறியிருக்கும் சமையம், தானும் சென்று இராமபிரானது வரலாற்றைத் தெரிவித்தல் தக்கதாமென்று, அநுமான் சீதையைக் காண விரும்பினன். ஆனல் இராவணனது குற்றேவன் மகளிர், அவனுணை கடவாது சீதையை வருத்துபவர்களாயிருந்தனர். அன்றியும் சிறைசெய்யும் தந்தொழிலில் நிலைநின்று உறங்காது நிற்பாராயினர். ஆதலால், அவர்களை உறங்கச் செய்வதனிமித்தம், இறத்தற்குக்காலம் நேர்ந்தவர்போல மயக்கமடையச் செய்தான். மிகப்பல நாட்களாகத் துயருறுபவளான பிராட்டி, ஒருநாளும தூங்காத குற்றேவன்மகளிர், அன்று தூங்கியதைப் பார்த்து ஆச்சரியமடைந்தனள். ஆயினும் தனக்கு நேர்ந்த துன்பத்தை இன்னமும பொறுக்க முடியாதவளாய், தப்பும் வழி சிறிதும் தம்மனத்தறியாதவளாய் நொந்து புலம்புவாளாயினள். தான் இருக்கும் இவ்விடத்தைத் தெரிந்துகொண்டு இராமபிரான் கடல் கடந்துவந்து பகை தொலைக்கச் செய்யும் தனுஷ்டாரம், தனக்கு ஆறுதலை உண்டாக்குமென்பதை எதிர்நோக்குவாளாயினள். எனினும், "ஊழிற் பெருவலி யாவுள" என்றபடி சீதையும் விதியை வலி தென்று கூறுகிருள். இன்னும், "கல்லாமதியே! கதிர்வானிலவே! செல்லாவிரவே! சிறுகாவிருளே!" என ஒவ்வொன்றையும் முன்னிலைப்படுத்துகிருள். அல்லாமலும் தன்னை வருத்துவதை ஒழிக்க வேண்டுமென இரங்குகிருள். பெண்ணை வருத்துதல் பெரும்பாவமென்று உணராது தன்னை வருத்துவதால், சந்திரனைச் சீதை கல்லாமதியென இகழ்ந்து கூறுகிருள். அயலிலுள்ள பூங்கொடிகளைத் தன் சுற்றமாக நினைக்கிருள். எனது துன்பத்தை நீக்குவதன்றித் துன்பந்தரும் கா[illegible] துணையாகக்கொண்டு, இவ்வாறு வருத்துதல் தக்கதன்றென கொந்து கூறுகிருள். நீங்கள் எனது அன்புக்குரிய தலைவன் மாட்டுத் தூது சென்று, என் நிலையைச் சொல்லவேண்டுமென்று குறையிரந்து நிற்கிருள். ஒருபோதும் வலிமை குன்ருத மகாவீரனே! நாராயணனே!! ஒப்பற்ற தலைவனே!!! என்று தன் முன்னிலையில் இல்லாத இராமனை இங்ஙனம் விளித்துக் கூறுகிருள். பின்னரும், "காட்டிற்குச் செல்லவிருக்கையில் என்னை நோக்கி 'காட்டிற் பலவகைத் துன்பங்கள் உள்ளன; ஆதலின் நீ இங்கேயே இரு. நான் சிலநாட்களுள் மீண்டுவருவேன்' என மிக்ககருணை கொண்டு சொன்ன தாங்கள் இன்று அரக்கர் கைப்பட்டு இவ்வாறு பெருந்துயரமுறுகையில் இங்குவந்து உதவாது வாளாவிருப்பது தங்களுக்குத்தகுதியாமோ?" என்று சீதைமனம் வருந்துகிருள். "கருவிமாமழைக் கற்கடங்கண்டு நான் வருவேனீண்டு வருந்தலை நீ என்ருன்." என்ற அயோத்தியாகாண்டச் செய்யுள் இங்கு நினைத்தற்குரியது. நாயகனை இனிக் காணுதல் அருமை. ஆதலால் அவனைப் பிரிந்தும் உணர்வோடு நெடுநாள் உயிர்த்திருந்தாளென்னும் பழிவருவது நிச்சயம். அவ்வாறு அப்பழியை அடையாவண்ணம் நீங்கும்படி தன்னுயிரைக் கேட்பதுபோலப் புலம்புகிருள்.

மிக்க வலிமைகொண்ட தந்தை தசரதனையும், தனது பிரிவாற் கொன்றனன்; எல்லா உலகத்தவரையும் துன்பத்திற்குள்ளாக்கி வனத்திற் சென்றனன்; இவ்வாறு இரக்கமில்லாத கன்னெஞ்சனுன இராமன், என்பக்கமாக இரங்கி உருகுவானென்றெண்ணுவது பெரும் பேதைமையேயாகும். என்று எண்ணுகிருள். இங்ஙனம் பலவாறு எண்ணிப் பெருமூச்சுவிட்டு வருந்துபவளாய் இறப்பதே தகுதியென உணர்கிருள்.

"சாதல் வந்தடுத்தகாறும் தனக்கொரு சாதலின்றிப் பூதலம் [illegible] என்பதை [illegible] கொண்டுவருகிருள். அல்லாமலும் தான் பிறவூரில் வசிக்க நேர்ந்ததைக்குறித்துப் பலவாறு வெறுத்துக்கொள்கிருள். பரபுருஷர் விரும்பினமையும், பிறர் கூறிய கடுஞ்சொற்களும் என்ற ஒவ்வொன்றே உயிர்விடுதற்குப் போதுமான இரண்டு காரணங்களாம். அங்ஙனமிருப்ப இறவாது இன்னும் உயிரோடு இருக்கின்றேனே எனத் தன்னைக் கடிந்துகொள்ளுகிருள். இவ்வாறு சொல்லிப் பிரலாபித்துக்கொண்டே குருக்கத்திப்புதரண்டை கடைசிமுடிவிற்கு வருகிருள். இந்நிலைகண்டு அநுமான் செய்வதின்னதென்றறியாது பலவாறு யோசிக்கிருன். உடனே அவளது உயிரைக்காக்க எதிரேவிழுகிருன். முன்பின் அறியாத தன்னைக் கண்டால் யாரோவென ஆசங்கை அடைவாளென்றெண்ணி வரலாறு முழுவதும் தொகுத்துக் கூறுகிருன். இராமன் வராமைக்கும் காரணம் கற்பிக்கிருன்; இராமன் கொடுத்த அடையாளத்தைக் காட்டுகிருன். இவைகளைக் கண்ட சீதை இராமபிரானது திருநாமத்தைச் சொல்லி வந்தமைபற்றி மனங்கனிந்து இரக்கங்கொள்ளுகிருள். ஆயினும் இராவணனே இவ்வாறு மாறுவேடம்பூண்டு வஞ்சனைக் கருத்துடன் வந்துளானெனக் கருதிக் கோபத்தையும் ஒருங்கே அடைகிருள். பின், இவன் அரக்கனேயானுலும் ஆகட்டும், அல்லாமல் இப்பொழுது காணப்படுகிறபடி குரங்குக் கூட்டத்திற்குத் தலைவனேயானுலும் ஆகட்டும், இவனல் விளைவது தீமையேயானுலும் ஆகட்டும், இவ்விடத்தில் வந்து எனது தலைவனுகிய ஸ்ரீ இராமபிரானது திருநாமத்தைச் சொல்லி என் அறிவை உருகச் செய்தான், போகிற உயிரையும் போகவொட்டாது காப்பாற்றிஞன். இதைக்காட்டிலும் செய்யத்தக்கதோர் உபகாரமும் உளதாமோ? என்று அநுமனை நன்கு மதிக்கிருள்:

" அரக்கனே யாக வேறோர்
 அமரனே யாக வன்றிக்
குரக்கினத் தலைவ னேதா
 னுருக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங்
 கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கின னுணர்வைத் தந்தான்
 உயிரிதி னுதவி யுண்டோ"

### 218-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**வியாபாரிகளின் கைவசமுள்ள பழைய உபயோகிப்பவரின் கூப்பன்கள்.**

1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் திகதிக்குப் பின், சில்லறை வியாபாரிகளின் கைவசம் இன்னுமுள்ள பழைய உபயோகிப்பவர்களின் கூப்பன்கள், மொத்த வியாபாரிகளிடம் புடவை கொள்முதல் செய்யச் செல்லுபடியாகமாட்டாது: 1946-ம் ஆண்டு மாச் மாதம் 30-ந் திகதியின் பின் ஒரு மொத்த வியாபாரியும் பழைய உபயோகிப்பவரின் கூப்பனுக்குப் புடவை விற்கக் கூடாது.

2. வெளியூர் மொத்தப்பங்கீட்டு வியாபாரிகள் தவிர்ந்த எல்லா மொத்த வியாபாரிகளும், அமெரிக்கன்புடவை மொத்த வியாபாரிகளும் 1946-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் திகதிக்குப் பிந்தாது எல்லாப் பழைய உபயோகிப்பவரின் கூப்பன்களை கூப்பன் வைப்பகத்தில் (Coupon Bank) சேர்ப்பிக்க வேண்டும்.

3. வெளியூர்ப் பங்கீட்டு வியாபாரிகள் தங்கள் மொத்தவியாபாரக் கணக்கிலுள்ள பழைய உபயோகிப்பவர்களின் கூப்பன்களை 1946-ம் ஆண்டு ஏப்ரல் 1-ந் திகதி தகவலாலயத்தில் (Information Bureau) சேர்ப்பிக்க வேண்டும்.

4. கொழும்பு நகரம், கொழும்புக் கோட்டகம் (District) தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள சில்லறை வியாபாரிகள், பொட்டணி வியாபாரிகளுட்படத் தங்களிடமுள்ள உபயோகியாத பழைய கூப்பன்களை அவ்வவ் இடங்களிலுள்ள (புடவை) உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் சேர்ப்பிக்கவேண்டும். கொழும்பு நகரம், கொழும்புக் கோட்டகங்களில் உள்ள சில்லறை வியாபாரிகள் அவற்றைப் புறக்கோட்டையிலுள்ள கூப்பன் வைப்பகத்தில் சேர்ப்பிக்க வேண்டும். இவ்வகையான எல்லா ஒப்படைப்புகளும் 1946-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் திகதிக்குமுன் முற்றுப் பெறவேண்டும்.

5. புடவைக் கட்டுப்பாட்டு 200-ம் இலக்க அறிவித்தற்படி எனது அலுவலதிகாரிகளால் ஒப்பம் இடப்பட்ட கூப்பன்களே ஒப்படைக்கப்படும்போது ஏற்றுக்கொள்ளப் படக் கூடியன.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு (7.3.1946.) [2678]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: பார்த்.பங்குனிசஉ

## பொதுமக்கள் விழிக்க வேண்டும்!

**என்**றுமில்லாத உணவுப் பஞ்சம் நமது நாட்டில் தலை காட்ட ஆரம்பித்துவிட்டது. சிற்சில இடங்களில் அரிசி மாத்திரமன்று கோதுமை யப்பமாவது கிடைப்பது மில்லையாம். இப்படியானுல், நம் நாட்டின் நிலை யாதாக முடியுமென்பது சொல்லவும் வேண்டுமா? அரசினர்தான் யாது செய்வார்? கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களைத்தான் பெற்று மக்களுக்கு வழங்குவர். கிடையாவிடத்து யாதுசெய்வரோ? பொதுமக்கள் எவ்வித உணவுப் பொருள்களை விருத்தி செய்யலாமோ அவைகளைக் காலந் தாழ்க்காது உற்பத்தி செய்வதில் விரைந்து ஈடுபடவேண்டும். இவ் விஷயத்தில் ஒரு கணப் பொழுதுக்காவது பிறரை நம்பியிருப்பது மோசமாகவே முடியும்.

உணவுப் பஞ்சம் இலங்கையில் மாத்திரமல்ல, உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுத் துயரை மக்கட்கு இழைத்து வருகின்றது. நமது அயல் நாடாகும் இந்தியாவிலும் உணவின்றிப் பட்டினி கிடப்போர் தொகை கூடிக்கொண்டே வருகின்றது. இந்திய அரசினர் இவ்வுணவுப் பஞ்சத்தினின்றும் பொதுமக்களைப்பாதுகாப்பதற்கு அளவு கடந்த ஆயத்தங்களும் முயற்சிகளும் கையாண்டு வருகின்றனர். அப்படியே இலங்கையரசினரும் முயற்சி மேற்கொள்ளின், ஓரளவுக்காவது நன்மை கிட்டாது போகுமா? இப்போது இலங்கையரசினர் நாள்வீதம் அரிசிக் கப்பலையும், கோதுமைக் கப்பலையும் எதிர்பார்த்த வண்ணமாகவேயிருக்கின்றனர். இம்முறையில் உணவுப் பொருள்களைப் பெற்று மக்களுக்கு அளித்து வரலாம் என்பது, நிரந்தரம் சாத்தியப்படுமா என்பது தான் எமது கேள்வி? உணவுப் பொருள்களைக் கொண்டு வருங் கப்பல்கள் வராதொழியின், நிலை யாதாகுமோ? ஆகவே, வருங்காலம் மிகக் கொடியதாகப் போகின்றதென்பதற்குச் சந்தேகமேயில்லை.

இலங்கை மக்கட்கு வேண்டிய உணவுகளைப் பெறுவதன் பொருட்டு இலங்கையரசினர் பிரதிநிதியாகச் சேர். E. குணத்திலக்கா அவர்கள் இப்போது அமெரிக்காவில் நடக்கும் உணவுச் சங்கக் கூட்டத்தில் வாதிக்கின்றனர். இந்தியப் பிரதிநிதிகளும் இச் சங்கத்திற் சமுகமளித்து இந்தியாவின் குறையையும், தேவையையும் எடுத்துக் கூறுகின்றனர். இச் சங்கத்தினர் நம் நாட்டுக்கு உணவுப் பொருள் விஷயமாகச் சிறிதளவுநன்மையையாவது புரிவது நிச்சயம். ஆனுல் இதை நாம் முற்றுக நம்பி மோசம்போகா திருப்போமாக. கொடிய பஞ்சத்தினின்றும் நாம்தப்பி, பிழைக்க வேண்டுமாயின் வேண்டிய வேண்டிய உணவுப்பொருள்களை நாமே உற்பத்தி செய்ய வேண்டும். முற்றுக அரிசியில் நம்பியிராது, மற்றைய சிறுதானியங்கள் கிழங்குவகைகள் என்பனவற்றைப் போதியவளவு உற்பத்தி செய்ய வேண்டும். கமக்காரர் மாத்திரமல்ல மற்றையோரும் உணவுப்பொருள் விருத்தியில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைக்க வேண்டும். கிடைக்கக்கூடிய நிலங்களில் ஏதாவது உணவுப் பொருளைக் காலந் தாழ்க்காது உண்டாக்குவோமாக. இற்றைக்கு நான்கு வருடத்துக்கு முன் உணவு விருத்தியில் இலங்கை மக்கள் கைக்கொண்ட ஊக்கத்திலும் பன்மடங்கு ஊக்கத்தையும், உணர்ச்சியையும் யாவரும் மேற்கொள்ள வேண்டும்.

**யு**த்தம் முடிவடைந்து சமாதானம் ஏற்பட்டமையால், உலகம் பழைய நிலையை அடையுமெனப் பலர் எண்ணினர். உணவுப் பொருள்களும் மற்றைய அவசிய தேவைக்குரிய பொருள்களும் விரும்பியவாறு மலிவாகப் பெறலாமென எண்ணினர். நினைத்தமைக்கு முழுமாருக அவைகள் கிடைப்பது மிகவரியனவாய்விட்டன. இக்கஷ்டநிலை நீங்க இன்னும் எத்தனை வருடஞ் செல்லுமோ யாரறிவார்? இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்து சமாதான உடன்படிக்கைகள் ஒழுங்காகமுன்னர் மூன்ருவது உலக யுத்தம் ஆரம்பிக்குமோவென்று அஞ்சவேண்டியதாகின்றது. மேலும் மேலும் யுத்தம் தோன்றுவதாயின், உலக நிலை மிக்க அலங்கோலத்தையடையுமே. பல்வேறு சாதியினரது பொருளாதாரநிலை சீரடைய இன்னும் எத்தனை ஆண்டுகள் வேண்டுமோ? பொதுவாக நோக்குமிடத்துப் பெரிய தீமைகள் உலக மக்களை ஆட்டியலைக்கப்போகின்றன என்பது வெளிப்படை.

**எ**ப்படியாயினும் அடுத்து வருங் கொடிய பஞ்சத்தை எதிர்த்து அதிலிருந்து தப்பித்துக்கொள்ள வழிகாண்பதே நாம் அவசியஞ் செய்யவேண்டிய கடமையாகும். மந்திரி சபையினரும், அரசாங்கசபையினரும் இவ் விஷயத்தை மேன்மேலும் யோசித்தும், வாதித்தும்மாத்திரம் நிற்பின் நன்மை எய்தப் போவதில்லை. பிறநாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களைப் பெறுவதுடன் நாட்டு மக்கள் உணவுப் பொருள் விருத்தியில் அக்கறை கொள்ள ஏவவேண்டும். போதிய நிலங்களைப் பண்படுத்திப் பயிரிடுவதற்கு இன்றியமையாத நீர்ப்பாய்ச்சல் வசதிகளைச் சோர்வின்றி அரசினர் செய்து கொடுக்கவேண்டும். விதை தானியங்கள்வேண்டிய அளவு அளிக்கவேண்டும். இவ் விஷயங்களை அரசாங்கசபையங்கத்தினர் தத்தம் தேர்தற் பகுதிகளிற் சென்று பொது மக்களுக்கு விளக்கி அனுட்டானத்தில் அவைகளைச் செய்து முடிக்கும்படி தூண்ட வேண்டும். ஒவ்வொரு தேர்தற் பகுதியிலும் உணவுப் பொருள் விருத்திச் சங்கமொன்று அரசாங்கசபை அங்கத்தினர் தலைமையில் தொழிற்படின், பெருநன்மை எய்த இடமுண்டு.

## காங்கேசன் துறைக்கு பொதுஜன வைத்தியசாலை

**சுகாதார நிர்வாகசபை தீர்ப்பு**

**சென்ற வெள்ளிக்கிழமை** நடைபெற்ற சுகாதார மந்திரி சபையின் நிர்வாக சபையினர் கூட்டத்தில் காங்கேசன் துறையிலுள்ள ராணுவ வைத்தியசாலையைப் பொதுஜன வைத்தியசாலையாக (Civil Hospital) மாற்றியமைக்க வேண்டுமென ஏழு அங்கத்தினர்கள் சம்மதங் கொடுத்தனர். திரு. W. தஹநாயகா ஒருவரே பாதகமாக வாக்களித்துள்ளார்.

இந்த இராணுவ வைத்தியசாலை சம்பந்தமாக விசாரணை நடாத்துவதற்குச் சுகாதாரமந்திரி சபையிலிருந்து இருவர் சில வாரங்களின் முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்களல்லவா? இவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை இச்சபையின் நிர்வாக சபை அன்று பரிசீலனை செய்தது. இதுகாரணமாக நீண்ட விவாதம் நடைபெற்றதாம். அங்கத்தவர்களிற் பெரும் பான்மையோர் சமய சம்பந்தமாக நிகழ்த்தப்பட்ட எதிர்ப்பை வரவேற்கத்தான் வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தனராம். கடைசியில், சம்மதம் எடுக்கப்பட்ட போது மேற்கூறியவாறு அங்கத்தவர்கள் வாக்களித்துவிட்டார்கள்.

# பாதை ஓரத்தில் ★

## பாட்டைசாரி

**சும்மா இருந்துகொண்டு** சோதனையிற் சித்திபெறுஞ் சக்தி இலங்கை மாணவர்களுக்குத் தாராளமாக விருக்கின்றது. சமீபத்தில் ஆங்கில எஸ். எஸ். ஸி. என்ற பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்தன. கடந்த வருஷம் இறுதியில் நடந்த இக்தப் பரீட்சைக்கு அநேகர் சென்றிருந்தனர். காய்ச்சல் காரணமாக ஒரு சிலர் பரீட்சைக்குச் செல்லாது வீட்டிற் படுத்திருந்தனர். ஆனுல் நடந்ததென்ன? ஏதோ ஒருவிதமாக அவர்களின் பெயர்கள் சித்தியடைந்தவர்களின் பெயர்களோடு சேர்ந்து கொண்டன. சித்தி பெறுவதற்கு அருகதையற்ற வேறு சில மாணவர்களும் இம்முறை 'குண்டு' போடாமற் தப்பிக்கொண்டனர்.

சில வருஷங்களாக இலங்கை வித்தியாபகுதி இப் பரீட்சையை நினைத்தபடி நடாத்தி வருகின்றது. எவ்வித திட்டமுமில்லாமற் குப்பைத் தனமாகப் பரீட்சைகளை ஏற்படுத்தி இலங்கைக்கு வசைதேடிக் கொடுக்கின்றனர். நிர்வாகத் திறமையற்ற உத்தியோகஸ்தர்களும் பொறுப்பற்ற 'கிளாக்'மாரும் மாணவ மாணவிகளின் உயிர்களுடன் கீச்சுமாச்சுத் தம்பலம் விளையாடுவது துரோகமென்பதைக் கல்வி அதிகாரிகளால் உணரமுடியாதா, என்ன?

### தகுதியில்லை

**இ**லங்கை வித்தியாபகுதிக்கு, எஸ். எஸ். ஸி. பரீட்சையை ஊழலின்றி நடத்த முடியாதென்பது பிரசித்தம்!! தனக்கடாச் சிங்களம் தனது பிடரிக்குச் சேதம் என்பதுபோலப் பரீட்சை நடத்துவதற்குத் தகுதியற்றவர்கள் எதற்காக ஒரு பாரத்தைத் தலையிற் சுமத்திக்கொண்டு திண்டாட வேண்டும்? இலங்கைப் பல்கலைக்கழகம் இதை நடத்தி மாணவர்களுக்கு நீதி வழங்கலாம். கூடிய விரைவில் மாற்றம் ஏற்படவேண்டும்.

### பாட்டி பாடிய பல்லவி

**இ**லங்கை அரசாங்க நிர்வாகத்தின் ஊழல்கள் ஒருபுறமிருக்கக் காங்கேசன் துறையில் கயரோக வைத்தியசாலையை ஏற்படுத்துவதற்கு ஒரு 'கிளிக்' பட்டபாடும் செய்த துடியாட்டங்களுஞ் சொற்பமல்ல. போதாக் குறைக்குப் பாட்டி பாடிய பல்லவியை இரைந்த வண்ணம் பணக்காரக் கும்பலின் பத்திரிகை ஒன்று கொழும்பில் நின்று நர்த்தனம் புரிகின்றது. பாட்டி கதையைக் காதிற் போட்டுக்கொண்டு நாட்டுக்கு நல்லது சொல்ல வெளிக்கிளம்புவது புத்தி சாதுர்யமான வேலையல்ல.

### அடிகளின் கடிதம்

**சு**வாமி விபுலானந்தர் அவர்களின் நிழலில் ஒதுங்கி நிற்கும் ஸ்ரீ. தஹநாயகா காங்கேசன் துறை இராணுவ வைத்தியசாலை விஷயமாக ஒரு சிலர் செய்த சுயநலச் சூழ்ச்சிகளை அறிந்தும் அறியாதவர் போலப் பிதற்றுகின்றுர். சுவாமியவர்களும் இவ்வலையிற் சிக்கிக்கொண்டார். சமய உணர்ச்சியைத் தட்டிக் கழித்துவிட்டுக் காரியம் பார்க்க முடியாதென டொக்டர் கலீல் கருதுகின்றுர். எனவே விசாரணைச்சபையும் மாறுபட்ட அபிப்பிராயத்தையே தெரிவித்திருக்கின்றது.

இந்த இலட்சணத்தில் சுவாமி விபுலானந்தர் அவர்களின் கடிதத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, பாட்டிகதையைக் கேட்க வேண்டாம் என்று அடிகள் சொல்லும் போது, எதற்காக இனித் தயங்க வேண்டும்? [illegible] அவதிப் புதைத்துக் கொண்டு அடைக்கலம் புகுந்தது அசட்டுத்தனமாகும். பொதுஜன அபிப்பிராயத்தை அருவருக்கத்தக்க முறையில் உருப்பெறச் செய்து நாசவேலைகளுக்கு உபயோகிப்பதும்நாணயக்கேடுதானே

### பொதுஜன வெற்றி!

**பொ**துமக்கள் போடுஞ்சப்தம் இறைவனின் இதயஒலி என்பது காங்கேசன் துறை வைத்தியசாலை விஷயத்தில் உண்மையாகி விட்டது. விசாரணைச்சபையின் விளைவாகக் காங்கேசன் துறைஇராணுவ வைத்தியசாலை பொதுஜன ஆஸ்பத்திரியாக மாறப்போகின்றது. சுயநலக்கும்பல் தலையடி பெற்றதே போதுமானது. ஸ்ரீ தஹநாயகாவின் கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு இவர்கள் இனி அழுது பிரலாபிக்கலாம்!!!

### "செக்ஸோ" சம்பவம்

**இ**லங்கைப் பல்கலைக் கழகத்து மாணவர் சங்கம் "செக்ஸோ" என்ற சஞ்சிகையை வெளியிட்டிருக்கின்றது. இந்த இதழில் இம்முறை அருவருப்பான இலக்கியமும், ஏதோ ஒரு சித்திரமும் இருப்பதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று கண்டித்திருக்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாகிவருவது ஏகாதிபத்திய, தாசர்களுக்குக் கட்டோடு பிடிக்காது. ஆகவே, கொழும்புத் தினசரியின் கூற்றை நம்பமுடியாது. பல்கலைக் கழகத்துச் சஞ்சிகையைப் படித்த பின்னர் தான் முடிவுகட்டலாம். கழகத்துச் சங்க அதிகாரிகள் 'செக்கோ' ஆசிரியரை ஒருவருடகாலத்துக்குக் கழகத்தினின்றும் அகற்றியிருக்கின்றனர். டைம்ஸ் பத்திரிகையின் கண்டனத்தையெதிர்த்துப் பல்கலைக் கழகத்து மாணவர் சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

மாணவர்கள் தங்கள் சஞ்சிகையிற் குப்பை, கூளங்களைச் சேர்த்திருந்தால் அது விரும்பததக்கதல்ல. இத்துறையிற் சேலைகட்டிய மாதரும் முயற்சித்திருக்கின்றனர் எனத்தெரிகின்றது. மாணவர்கள் நாளைய மனிதர்களல்லவா? எனவே, அவர்கள் கௌரவமாக நடந்துகொள்ளவேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு இழுக்கு உண்டாக்கக்கூடாது.

### வாழ்க! ஸ்ரீ குமரப்பா!

**கா**ரைநகர் கிராமப் புனருத்தாரண சங்கத்தின் அழைப்பையேற்று டொக்டர் குமரப்பா அவர்கள் இங்கு வந்திருக்கின்றுர். அவரைவாழ்த்துகின்றேம். இவ்வித்தகனின் விரிவுரைகளைக் கேட்டு இங்குள்ளவர்களும் பயன்பெறுவார்கள் என்று நம்பலாம். கடந்த வாரம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பொருளாதார விஷயமாகவும், கிராமச் சீரமைப்புச் சம்பந்தமாகவும், காந்தித் தத்துவம்பற்றியும் சிறந்த பல சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கின்றுர். பண்பாடு மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ குமரப்பாவின் தேசபக்தி மாசு மறு அற்றது.

### விவசாயப் பூவையர்

**கி**ராம இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது விவசாயத்திற் பயிற்சிபெறுவதற்குச் சீமை செல்லும் ஆறு சீமாட்டிகளின் செய்தி நினைவுக்குவருகின்றது இவர்கள் இங்கிலாந்து சென்று தோட்டவேலை, வீட்டுப்பணி, கோழிவளர்த்தல், குஞ்சுபொரித்தல், கால்நடைப் பண்ணைபோன்ற துறைகளில் விசேஷ பயிற்சி பெறுவார்களாம். விவசாய மந்திரி இவர்களுக்கா 300,00 ரூபா ஒதுக்கிவிடப்போகின்றுர். இத்தொகை ஆறு பெண்மணிகளின் படிப்புக்கும் பிரயாணச் செலவுக்கும் போதுமென்பது மந்திரியின் கருத்து. பக்கத்திலுள்ள இந்தியாவிற் சென்று விவசாயப் பயிற்சிபெற முடியாதா? வசதிகள் இல்லையா? ஸ்ரீ குமரப்பாவுடன் இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்வது நல்லது.

# கவியரசி — — சரோஜினி

**பொன்னும் மணியும்** முத்தும் வைத்திழைத்த பூங்கவிதை ஏந்தி, நவயுகத்தின் தலைவாயிலில் நிற்கும் கவியரசி சரோஜினிதேவியின் 66-வது ஆண்டு நிறைவு விழாவை 1946, பிப்ரவரி மாதம் 13-ந் திகதி நாடெங்கும் மக்கள் குதூகலத்துடன் கொண்டாடினுர்கள்.

சரோஜினிதேவி, விழிப்புற்ற இந்தியாவின் வீராங்கனை. அதன் விடுதலை எழுச்சியின் வீரமுரசு. கொந்தளிக்கும் தேசீய உணர்ச்சிக்குக் கவிதா சொரூபம் கொடுத்தவர் அவர். சாரமற்றுச் சப்பென்றிருந்த அரசியலுக்கு உயிரும் சுவையும் ஊட்டியவர். ஆத்திரமும் துவேஷமும் விஷங்கலக்கும் அரசியலில், அன்பையும் அமைதியையும் பரப்ப முயல்பவர். துணிவும், தீவிரமும், தைரியமும் படைத்த அவர் இளைய பாரதத்தின் தலைமை தாங்குவது மிகவும் பொருத்தமே. தேசீயமர்கட்டும், மாதர் முன்னேற்றம், இளைஞர், தொழிலாளர்இயக்கங்கள், கல்வி, கலை, விளையாட்டு.—துவாகட்டும், அவர் பங்குகொள்ளாத, சேர்ந்து பாடுபடாத துறையோ, இயக்கமோ இல்லை என்று சொல்லிவிடலாம்.

சுகபோகத்தின் மடியில் வளர்ந்தவரானுலும், அவர் அதற்கு என்றும் அடிமையல்ல. வாழ்வின் பல்வேறு இன்பங்களையும் அவர் பாசக் கண்ணேடு பார்ப்பதில்லை; கவிகளுக்கே உரித்தான ரசனை உணர்வோடுதான் அவற்றை அவர் அனுபவிக்கிருர்.

**அ**வர் வெற்றியின் ரகசியம், அவருடைய தளராத தன்னம்பிக்கையும், மகிழ்ச்சி வற்றுத உள்ளமும்தான். அவர் உயர்ந்த நகைச்சுவை உடையவர். புன்னகை தான் அவர் பூண்டுள்ள பொன் அணியாகும். பூரண மலர்ச்சி பெற்ற உள்ளம் மகிழ்ச்சியை ஒலிபரப்பிச் சூழ் நிலையில் உயிர்த்துடிப்பும், உத்வேகமும் ஏற்றுகிறது. உடன் பழகுவோரிடைதன் அசையாத நம்பிக்கையை வேரூன்ற நட்டுவிடும் ஆற்றலுள்ளவர்.

தந்த மாளிகையில், சுந்தரச் சோலைகளில், விழித்திருந்தே விந்தைக் கனவு பல காணும் கவிக்குயில், அழுக்குப் பிடித்த அரசியலில் தலையிடுமாறு நேர்ந்ததற்குத் தாய்நாட்டின் திக்கற்ற நிலையே காரணமாகும். அவரது கவிவீணை அரசியற் புழுதியில் நலங்கெடக் கிடப்பதால் நாட்டிற்கும், கவி உலகிற்கும் மகத்தான நஷ்டமே என்று சொல்ல வேண்டுவதில்லை.

**ச**ரோஜினி தேவி ஜீவ கலை ததும்பும் ஒரு கவிஞர். நனவிலே கனவின் மெருகேற்றி அற்புதப் பண் பல் பாடியுள்ளார். சுட்டும் சுடர்விழி, வெள்ளி வான், நக்ஷத்திரங்கள், சோலை மலரொளி, சுந்தரப் புன்னகை, நீலக் கடலலை, நெஞ்சின் குமுறல்கள்-எல்லாம் நிழலும் ஒளியும் போல அவர் கவிகளில் பின்னிப் பிணைந்துள்ளன.

மண்ணும், மதுவும், மலரும், மங்கையும் மகிழ்ச்சியும் அவர் கவிகளில் பளிச்சிடுகின்றன.

கருத்துச் செறிவும், கற்பனை வளமும், வியத்தகு சொல்லாட்சியும், வேகமும் நிறைந்து, வான வில்லின் வண்ணச் சாயைகள் கொண்டு சௌந்தர்யத்தின் சம்பூரணப் பிரதிமைகளாக — அழகின் அமர சிருஷ்டிகளாக, — அவர் கவிகள் பொலிகின்றன.

**அ**வர் ஓர் அழகுக் கவிஞர். கவிதை அவர் உயிர் மூச்சு. தேசபக்தி அவர் உயிர்ப்பின் லட்சியம். 'சொல்லைத் தேனிற் குழைத்து' அநாயாசமாய்க் கவி பாடுவது போலவே கடல் மடை திறந்தாற்போல், கேட்பவர் அறிவையும், உணர்வையும் ஒருங்கே ஈர்க்கும் வகையில் பிரசங்கம் செய்வதிலும் அவர் இணையற்றவர்.

அவர்திறமைகளின் சேர்க்கை; சிறப்புக்களின் உறைவிடம். நாகரீகம் பூத்த நளின மென் மலர். பரந்த அறிவும், விரிந்த மனமும், உயர்ந்த குணமும், நிறைந்த புலமையும், நுண்ணிய கலை யுள்ளமும், கருணையும் படைத்து ஒளிரும் அவர் மாதர் குல மாணிக்கமாவார். பாரதியார் கனவு கண்ட "புதுமைப்பெண்" களின் முதற் பதிப்பு அவர். —சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

# பாஞ்சாலக் கோட்டை தகர்ந்தது

## அட்லி ஆட்சி சுதந்திரம் அளிக்குமா?

**பா**ஞ்சாலத்திற் கூட்டு மந்திரிசபை ஏற்பட்டிருப்பதைக் கண்டு ஜனாப் ஜின்னா வருத்தப் படுகிறார். பாகிஸ்தான் ஆட்சிக்குக் கேந்திரஸ்தானம்போன்ற பாஞ்சாலத்திலும் முஸ்லிம் லீக் ஏமாற்றமடைந்துவிட்டது. நாளாந்தம் ஜின்னாவின்கட்சி பலமிழந்து வருகின்றது. மாகாணத்தேர்தல்களே இதை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன. அந்நிய ஆட்சியை விரும்பாத அஸாம் காங்கிரஸுக்குப் பூரண ஆதரவு அளித்துள்ளது. சிந்து மாகாணத்தில் நிலவும் லீக் மந்திரி சபைமீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று விரைவில் நிறைவேறியே தீரும்.

பாஞ்சாலத்தில் முஸ்லிம் லீக்குக்குத் தேசாதிபதியின் ஆதரவுங் கிடைக்கவில்லை. ஆகவே, காங்கிரஸ், அகாலி, யூனியனிஸ்ட் ஆதியாங் கட்சிகள் சேர்ந்த கூட்டு மந்திரிசபை ஒன்று உருப்பெற்றிருக்கின்றது. மாலிக்கிஸார் ஹயத்கான் என்பவரே இக் கூட்டுக்கட்சியின் தலைவர். பாஞ்சாலத்துச் சட்டசபையிலே தனிப்பட்ட பெருங்கட்சி முஸ்லிம்லீக் ஒன்றுதான். இருந்தும் ஏனைய கட்சிகள் ஒன்று சேரும்போது லீக் கட்சியினர் தொகையிற் குறைந்துவிடுகின்றனர். இம்மாகாணத்திற் காங்கிரஸ் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு சம்பவம். ஏனைய மாகாணங்களிலே தமது பலத்தைக் கொண்டு மந்திரிசபை அமைப்பதுபோலப் பஞ்ச நதிகள் பாயும் பாஞ்சாலத்தில் அவ்வாறு நடந்து கொள்வது சாத்தியமாகாது. இது அதிககாலத்து அனுபவம். இன்றுவரை நடந்துவந்த விஷயங்களே இதற்குத் தகுந்த ஆதாரங்களாகின்றன. 1920-ம் வருடந் தொடக்கம் இம் மாகாணத்திற் கூட்டு மந்திரிசபையே நிலவிவந்துள்ளது. அப்போது சேர் பஸ்லி ஹுஸேன் பிரதம மந்திரியாக விருந்தார். இத்தகைய கூட்டு மந்திரிசபையின் நிர்வாகத்தை வேரறச் செய்வதற்கு ஜனாப் ஜின்னா பலவித பிரயத்தனங்கள் செய்து படுதோல்வியுற்றார். ஸ்ரீ சிக்கந்தர் காலத்திலும் முஸ்லிம்லீக் தலைவரின் முயற்சிகள் பலிக்கவில்லை. 1944-ம் ஆண்டிலும் ஜின்னாவின் எண்ணம் சின்னாபின்னமாயிற்று.

**இ**ம்முறை சகல முஸ்லிம் ஸ்தாபனங்களையுங் கைப்பற்றிவிடுவதாகப் பிடுங்கி அடுக்கினார். ஆனால் 86 ஸ்தானங்களில் லீக் பெற்றிருப்பது 75. பாஞ்சாலத்துச் சட்டசபையின் அங்கத்தினர் தொகை 175. ஆகவே ஜின்னா அவர்கள் 86 ஸ்தானங்களைப் பெற்றாலும் ஏனைய கட்சிகளின் சேர்க்கையின்றி மந்திரி சபையை (லீக்) ஏற்படுத்த முடியாது. தவிர முஸ்லிம் லீக் திட்டமான அரசியற் கொள்கைகளைக் கடைப்பிடித்து நாட்டுக்கு நன்மை செய்ய முயற்சிப்பதாயில்லை. ஏதோ இந்தியாவைத் துண்டம் போட்டுப் பாகிஸ்தான் பூச்சாண்டியைக் கொலுவிருத்துவதே லீக்கின்நோக்கம். ஆனால் பாஞ்சாலத்தில் உள்ள சீக்கியர்கள் கடைசிவரை பாகிஸ்தானுக்கு எதிராகவே முயற்சி செய்திருக்கின்றனர். சீக்கியர்களின் உதவியின்றிப் பாஞ்சாலத்தில் லீக் ஒன்றுஞ் செய்யமுடியாது. சீக்கியர்களுக்கும் ஜின்னாக் கோஷ்டியினருக்கும் பொதுவான கொள்கை எதுவுமில்லை. இதனால் சீக்கியரின் ஆதரவு காங்கிரஸுக்குக்கிடைத்திருக்கின்றது. 'யூனியனிஸ்ட்' கட்சியினரையுஞ் சேர்த்து மாலிக்கிஸார் ஹயத்கான் மந்திரி சபையை அமைத்து விட்டார். விஷயங்களெல்லாம் இப்படி வெற்றிகரமாக நடைபெறுமென ஜனாப்ஜின்னா கனவிலுங் கருதவில்லை. வங்காளமாகாணத்தில் நடத்திய திருவிளையாடலைப் பாஞ்சாலத்திலும் நிகழ்த்திவிடலாமென லீக் தலைவர் ஆகாயக் கோட்டை கட்டினார். பலாத்காரத்திலும் பயமுறுத்தலிலும் நம்பிக்கையுள்ள முஸ்லிம் லீக் பாஞ்சாலத்தில் நல்ல பாடம்படித்திருக்கின்றது. போதாக்குறைக்கு எல்லைப்புறத்திலும் காங்கிரஸ்மந்திரிசபை ஏற்பட்டுவிட்டது.

இத்தனை வருடகாலமாகப் பிற்போக்காளரின் அரணாக அமைந்திருந்த பாஞ்சாலத்துக்கு விமோசனங் கிடைத்திருப்பதைக் கண்டு ஜனநாயக உலகம் மகிழ்கின்றது. 1937-ம் வருடத்தில் மாகாண சுயாட்சி தோன்றியது. அன்று தொட்டு இன்றுவரை பாஞ்சாலத்தில் மாட்சிமைதங்கிய மன்னர்பிரானின் ஆட்சியே நிலவிவந்திருக்கிறது! இப்போது ஏற்பட்டிருக்கும் கலப்பு மந்திரிசபை பழைய பாதையைப் பின்பற்ற முடியாது. முற்போக்கான இலட்சியத்தை யடைவதற்கு உன்னத வழிவகைகளைக் கையாண்டு வெற்றிகண்டே தீருமென உறுதிகூறலாம்.

### பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டி

**அ**ட்லி அரசாங்கத்தைச் சேர்ந்த மூன்று மந்திரிமார் சில தினங்களில் இந்தியா வந்துசேர்வார்கள். பிரிட்டன் அனுப்பும் இத் தூதுக்கோஷ்டி சமரசப் பேச்சுகளில் அனுஷ்டிக்க வேண்டிய விஷயங்களை பிரிட்டிஷ் மந்திரிசபை முடிவுசெய்துவிட்டதெனத் தெரிகின்றது. பாகிஸ்தான் பிரச்சினையை எப்படித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுபற்றி நீண்டநேரம் ஆலோசனை நடந்ததாம். இருந்தபோதிலும் சிம்லா மகாநாடுபோலன்றி இத்தூதுக்கோஷ்டி ஏதோ உருப்படியான விஷயத்தைச் செய்து முடித்துவிட்டே ஊர்திரும்பும். சகல பொறுப்புக்களைக் கொடுத்தபோதிலும் யாதாகினும் ஒருகட்சி, அன்றேல் ஒருதலைவர் உடன்பாட்டுக்கு மறுத்தால் மந்திரிகள் தங்கள் இஷ்டம்போலப் பொறுப்புள்ள அரசாங்கத்தை அமைத்துவிட்டுச் செல்வார்களெனக் கருதப்படுகின்றது.

**இ**த் தூதுக்கோஷ்டியில் இந்திய மந்திரி பெதிக் லோரன்ஸ், உட்பட ஏ. வி. அலெக்ஸாண்டரும், சேர் கிரிப்ஸும் சேர்ந்திருக்கின்றனர். இச் சபை இம்முறை இந்தியத் தகராற்றைத் தீர்த்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்குமெனத் தொழிற்கட்சி நிர்வாகசபைத் தலைவர், பேராசிரியர் லாஸ்கி நம்புகின்றார். இம்மும்மூர்த்திகளின் வேலை கிரிப்ஸ் தூதுபோலன்றி அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகவேயிருக்கும். கிரிப்ஸ் இந்தியாவுக்குச் சட்டிபோட வெளிக்கிளம்பியபோது மாற்றமுடியாத ஒரு ஓட்டைத் திட்டத்தைச் சுமந்து சென்றார். "பிடித்தால் ஏற்றுக்கொள்ளுங்கள்; இல்லையேல் விட்டுவிடுங்கள்," என்ற அழகிற் பேச்சுவார்த்தைகளை நடாத்திச் சகல கட்சிகளினதும் எதிர்ப்பையும் அதிருப்தியையும்பெற்று வெறுங்கையுடன் நடைகட்டினார். ஆனால் இம்முறை மகாநாட்டில் எழுஞ் சகல சந்தேகங்களையுந் தீர்த்துவைக்கும் முறையிற் பேச்சுவார்த்தைகளின் விளைவாக உண்டாகும் நிலைமைக்கேற்பத் திட்டம் உடனடியாகவே தீர்மானஞ்செய்யப்படும். நேருஜீயும் ஏனைய இந்தியத்தலைவர்களும் கருதுவதுபோலப் பூரண சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டே தூதுக் கோஷ்டி தனதுவேலையை ஆரம்பிக்க வேண்டும்.

சகல கட்சிகளுக்கிடையிலும் ஒற்றுமை ஏற்படவில்லையென்று கூறிக் காரியத்தை நிறைவேற்றாது தூதுக்கோஷ்டி திரும்புதல் தவறு. எல்லாக் கட்சிகளையுந் தர்மமான கோரிக்கைக்கு இணங்கச் செய்யவேண்டியது மந்திரி கோஷ்டியின் கடமை. சிம்லாமகாநாடு நடந்தபோது உலகநிலை வேறு பிரிட்டனிலும் சேர்ச்சில் ஆட்சி நிலவியது. அந்த முரட்டு அரசாங்கம் செய்த துரோகத்துக்கு அட்லி ஆட்சி இப்போது ஈடு செய்ய வேண்டும். தனிப்பட்ட தலைவர்கள் சண்டித்தனம் விளைத்து சமரசத்துக்குக் கொள்ளி சொருகுவார்களானால் அவர்களை உதறித் தள்ளிவிட்டுத் தூதுக்கோஷ்டி மக்களின் அரசாங்கத்தை ஏற்படுத்தும் வேலையில் ஈடுபட்டு இந்தியாவுக்கு விமோசனம் காட்டிவிட்டே வேறு வேலைகளில் இறங்கவேண்டும்.

**பி**ரிட்டிஷ் மந்திரி சபையின் தூது கோஷ்டியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குக் காங்கிரஸ் தயார். அதற்கான சில பொறுப்பு வாய்ந்த காங்கிரஸ் தலைவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மகாத்மா காந்தி பிரசன்னமாக விருந்து முக்கிய விஷயங்களிலே தனது தெளிவான கருத்தைக் கூறி வழிகாட்டுவார் எனத் தெரிகின்றது. சமரசப் பேச்சுகள் நிகழுங் காலத்தில் மகாத்மாவின் தலைமைக் காரியாலயம் டில்லிமாநகருக்கு மாறுமென எதிர்பார்க்கலாம்.

**இ. அ.**

### 219-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**செல்லுபடியாகாத புதிய பிரத்தியேக கூப்பன்கள்**

இவ் அறிவித்தல் ஏதாவது பத்திரிகைகளில் வெளிவந்த இரு தினங்களில், ஏற்கனவே ஒப்பியாவிட்டால், மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் தங்களிடமுள்ள செல்லுபடியாகாமற் செய்யப்பட்ட புதிய பிரத்தியேக கூப்பன்கள் எல்லாவற்றையும் கூப்பன் வைப்பகத்தில் (Bank) ஒப்புவிப்பார்களாக.

ஈ. ரொட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 11-3-1946. [2681]

### 220-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**உபயோகிப்பவர் புதிய கூப்பன்கள் கடதாசியில் ஒட்டுதல்**

1 கடதாசியில் 1 புள்ளி கொண்ட 50 கூப்பன்கள்.

1 கடதாசியில் ½ புள்ளி கொண்ட 70 கூப்பன்கள் ஆக புதிய உபயோகிப்பவர்களின் கூப்பன்களைத் தனித்தனி கடதாசிகளில் ஒட்டி ஒப்படைக்க வேண்டுமென வியாபாரிகள் கவனிப்பார்களாக.

216-ம் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தலின் (6) ம் பந்தியிற் சொன்னபடியல்ல என்பதையும் வியாபாரிகள் கவனிக்க வேண்டும்.

ஈ. ரொட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி.
கொழும்பு, 12-3-1946. [2682]


### மாமரத் தோட்ட விற்பனை

கொக்குவில் றெயில்வே பிளாற்பாரத்துக்கு வடகிழக்கில் (2 ஏக்கர்) 32 பரப்பு விஸ்தீரணமுள்ளதும், காய்க்கும் பருவமுள்ள 80-க்கு மேற்பட்ட உயர்ந்தசாதி ஒட்டுமா மரங்களும், மற்றும் பனை, தென்னைகளும், தனிக்கிணறும் கிழக்கில்ரோட்டோரமாக வீடு கட்ட வசதியுமுள்ள தோட்டக்காணி விற்பனைக்கிருக்கின்றது. ரூபா 32,000 அல்லது கூடிய கேள்விக்குக் கொடுக்கப்படும். வேண்டுவோர் 31-3-46-க்கிடையில் மனேஜர், சோதிடப்பிரகாச பிறெஸ், கொக்குவில் P. O. என்ற விலாசத்துக்கு எழுதுக.
[2674—2]


# நமது வாசிகசாலை

## கல்விமுறை நூல்கள்

1. பாடசாலை நிர்வாகம்
2. குழந்தைத் தன்மையும் கல்விப் பயிற்சியும்
3. தாய்மொழிப் போதனை

இவற்றின் ஆசிரியர்: கோயமுத்தூர் அரசினர் வர்தா போதனாமுறைக் கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எம். எஸ். சுந்தரேசுவரன், எம். ஏ. எல். டி; பிரசுரம்: நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி சென்னை; இவை மூன்றினதும் விலை: ரூ. 3-0-0; இலங்கையில் விற்பனையாளர்: The Jaffna National Agency, Chunnakam கிடைக்குமிடம்: தனலக்ஷ்மி புத்தகசாலை, சுன்னாகம். சாரதா புத்தகசாலை, 16 சாப்பல் வீதி யாழ்ப்பாணம்.

**இ**வை ஆசிரியர்க்கும், ஆசிரியர் கல்லூரி மாணாக்கர்க்கும் ஆசிரியர் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்வோர்க்கும் பெரிதும் பயன்படும்; தெள்ளிய தமிழில் எழுதப்பட்டு, வெண்மையும் வழுவழுப்புமுள்ள நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றில், சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் அழகுகள் சிறந்துள்ளன. இவை போன்ற நூல்கள் பலப்பல தமிழில் வெளிவரல் வேண்டும். இவையிற்றை ஆக்கிய ஆசிரியரும் வெளியிட்டோரும் தமிழ் ஆசிரியரின் நன்றியைப் பெறுவர் என்பதில் ஐயம் இல்லை.

—மா. பீதாம்பரன்

**அரிச்சந்திரன் பொய்கள்:** ஆசிரியர்கள்: க. அயோத்திதாச பண்டிதர், ம. அரங்கசாமி பண்டிதர். பக்கம்: 40 விலை: சதம் 25.

பறையர்கள் என்னும் நூதனப் பெயரைப் பரவச் செய்தற்கும் அப்பெயரை ஏனையோர் இழிவாக மதித்தற்கும் இக் கட்டுக் கதை எழுதினார்களென்பது இவர்கள் கருத்து. வடநாட்டில் இருந்து தமிழ்நாடு புகுந்த ஆரியரின் போதனைக்குட்பட்டவர்கள் இந்துக்கள் என்றும் மறுத்து நின்றவர்கள் பௌத்தர்கள் பறையர்கள் எனப்பட்டார்களென்றும் காட்டுகிறார். 'யான்கொடுத்த மூதூர் தன்னில் எக்காலமும் வருவதில்லை. என்றஅரிச்சந்திரன் பின்வந்தான்; நாட்டை வாங்கமாட்டேனென்று, பின்வாங்கி ஆண்டான்; மனைவியை வெட்டுவேனென்று கூறிவந்தவன் வெட்டவில்லை, என பனை போன்றவற்றால் அரிச்சந்திரன் பொய்சொல்லியே இருக்கிறான் எனக்காட்டுதல்பொருந்தாதென்பதே எமது கருத்து. இப்படியே மனையாளும் பொய் கூறி இருக்கிறாளாம். 'நம் நாட்டில் வீரமற்ற மாதர்களில் சந்திரவதியும் ஒருத்தி. காமக்கடற் கரையேறான் காசினி முற்றும் எப்படி ஆண்டிருப்பான்' எனக் கூறுதலும் ஒவ்வாக் கருத்துகளே. இப் புராணக் கதைக்குத் தக்க காலவரையறையோ சான்றுகளோ இல்லையென்றும் புத்த சமயக் கொள்கைகளைப் போற்றியவரும் சந்திர வமிசத்தாருமாகிய ஒரு பகுதியாரே அரிச்சந்திரன் சத்தியகீர்த்தி என்பார் என்றும் வீரவாகு பிராமணன் விசுவாமித்திரன் என்பார் அச்சமயத்தை நசுக்க வந்த ஆரியசமயமாகிய கற்பனை சமயத்தைத் தழுவியவரும் ஆதித்த வமிசத்தாருமாகிய மற்றொரு பகுதியாரென்றும் ஆராய்ச்சியாற் காட்டுகின்றார்கள்.

—நா. க.

இந்நூலும், சென்றவாரம் விமர்சனஞ் செய்யப்பெற்ற பெண்ஏன் அடிமையானாள், இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நூல்களும் இலங்கையில், சாது நிலையம், 159 காலிரோட் கொள்ளுப்பிட்டி, கொழும்பு என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.


இலக்கியஉலகில் புதியசிருஷ்டி:

## மறுமலர்ச்சி

—மாதவெளியீடு—

முதல் இதழ் பங்குனியில் வெளியாகிறது

வருடசந்தா ரூ. 3-50

சகல இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு:

மனேஜர், 'மறுமலர்ச்சி,
288, ஆஸ்பத்திரிவீதி
யாழ்ப்பாணம்

[2683]

## யாழ்ப்பாணம் வந்துவிட்டார்

**உங்கள் சந்ததிக்கு வியாதியை வியாபிக்க விடாதேயுங்கள்**

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொற்றுவியாதிகளை உடையவர்கள் தங்களுக்குப் பின்னால் வியாதியும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானத்தைத் தவிர வேறெதையும் நிலைக்கச் செய்வதில்லை. நீங்கள் உங்கள் வாழ்க்கை யென்னும் படகைச் சேற்றில் ஓட்டவேண்டாம். ஆரோக்கியமும் பலமும்எப்பொழுதும் உங்களுக்கு இதரர்களின் மரியாதையையும், அன்பையும் பெறச்செய்கிறது. தேகாரோக்கியத்தில் கருத்துள்ள நீங்கள் ஏன் இன்னும் சருமநோயால் அவஸ்தைப்படுகிறீர்கள். பற்பல வைத்தியம் செய்தும் ஊசிகளேற்றியும் குணமில்லையென மனந் தளர்ந்துருகும் நீங்கள் இன்றே காலதாமதம் செய்யாமல் சிவானந்தசித்தர் வைத்தியசாலையின் அதிபரும் நாடிப்பரீக்ஷை நிபுணருமான டாக்டர் V. K. S. செல்லப்பா பிள்ளை M. A. M. S. அவர்கள் இம்மாதம் 10-ந் திகதி தொடக்கம் 30-ந் திகதி வரை யாழ்ப்பாணம் பிரபல சுருட்டு வியாபாரி அ. தம்பிமுத்து அவர்களின் பங்களாவில் நம்பர் 404. ஆஸ்பத்திரி ரோட் (ஸ்ரேஷன் சந்தி) யில் தங்கி இருக்கிறார். உடனே அவருடன் கலந்தாலோசியுங்கள். உத்தரவாத சிகிச்சை செய்யப்படும், இச் சமயத்தை இழந்துவிடாதீர்கள்.

## சிவானந்த சித்தர் வைத்தியசாலை

ஹெட் ஆபீஸ், 768, லோவர் வீதி, பதுளை.
பிராஞ்சு ஆபீஸ், 92, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாட்டின் தமிழ்மணி

## சுவாமி விபுலானந்தர் படத் திறப்பு



[விபுலானந்த அடிகளார்]

"ஈழநாட்டுக்குந் தமிழ் நாட்டுக்குமுள்ள தொடர்புகள் பலப்பல. நான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணாக்கரின் மாணாக்கன். ஈழத்துத் தமிழ் மணிகளுள் விபுலாநந்த அடிகளும் ஒருவர். அடிகளார் துறவுக்கோலத்தை மேற்கொள்வதற்கு முன்னுகவே அவர்களை நான் அறிவேன. அக்காலத்தில் மயில்வாகனஞர் என்னும் பெயராடு அவர் விளங்கினுர்." அண்ணுமலைப் பலகலைக்கழகல் நிகழ்ந்த விபுலாநந்த அடிகள் படத் திறப்புவிழாவின் தலைமை தாங்கிய திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் குறிப்பட்டார்.

கடந்த 7-3-46 வியாழனன்று அண்ணுமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பகுதிக் கட்டிடத்தில் அப்பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியராக இருந்தவர்களும் இப்போது இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராகக் கடமை பார்த்து வருபவர்களுமாகிய விபுலாநந்த அடிகளின் படத் திறப்புவிழா ஈழநாட்டு இளைஞர் கழகத்தின் ஆதரவில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. கதர் மாலை சூட்டப்பெற்ற கவின்பெறு படம் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

கழகத் தலைவர் பண்டித வித்துவான் திரு. க. கி. நடராஜன் அவர்கள் தலைவரவர்களுக்கு மாலை சூட்டித் தமது வரவேற்புரையை நிகழ்த்தினுர்கள். அதுகாலை, திரு. வி.க. அவர்களுக்கும் ஈழநாட்டுக்குமிடையே உள்ள தொடர்பைக் குறிப்பிட்டார்கள். அடிகளின் படத்தைப் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் திறந்து வைப்பதன் பொருத்தத்தையும் எடுத்துக் காட்டி ஏனைய பேராசிரியர்கள் விரிவுரையாளர்களாகிய அனைவரையும் வரவேற்ருர்கள்.

தலைவர் திரு. வி. க. அவர்கள் தமது தலைமைப் பேருரையின் கண்ணே ஈழநாட்டுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள தொடர்பினைக் குறிப்பிட்டுத் தமக்கும் ஈழநாட்டுக்குமிடையே உள்ள தொடர்பினையும் எடுத்துக் காட்டினுர்கள். ஈழத்துத் தமிழ்மணிகளுள் விபுலாநந்த அடிகளும் ஒருவர் என்பதைக் கூறி, அடிகளின் பேச்சுத்திறன் எழுத்துத்திறன், பாட்டியற்றும் ஆற்றல், சமயத்தொண்டு, சமரஸக் கருத்து ஆகியவற்றையெல்லாம் எடுத்துக் காட்டினுர்கள். அடிகள் இமயஞ்சென்று திரும்பியதையும் பாராட்டினுர்கள். பின்னர் அடிகளின் படத்தைத் திறந்துவைக்குமாறு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் M. A., M.O. L., B. L அவர்களை வேண்டிக்கொண்டார்கள். திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் படத்தைத் திறந்துவைத்து நீண்டதொரு விரிவுரை நிகழ்த்தினுர்கள். அதுகாலை, தமிழ்ப் பேராசிரியர்களாயிருத்தற்குத் துறவிகளே தக்கவர்கள் என்றும், துறவு மனப்பான்மையுடையவர்களே தமிழனுடைய மானத்தைக் காப்பாற்ற வல்லவர், என்றும் எடுத்துக்காட்டித் திரு. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

"அடிகள் அண்ணுமலை நகரில் வதிந்த காலத்துத் திருவேட்களத்தை யடுத்துள்ள பழந்தமிழர் சேரிகளில் செய்த தொண்டுகள் மிகப்பல. பழந்தமிழர் தம் உடம்பையுங் குடலையும் தெருவையுந் தூய்மையாக வைத்துக் கொள்ளும்படி தூண்டித் தூய்மை செய்தும் அவர் தம் இளஞ்சிறுர்க்கு வேண்டுவன உதவியும் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு அச்சிறுர்களுக்கு இரவிற் கல்வி பயிற்றியும் தொண்டு செய்து வந்தமை இங்குள்ள வைதீகர் சிலருக்குப் பிடிக்கவில்லை. என்ருலும், அடிகள் தாம் மேற்கொண்ட தொண்டினை ஒரு சிறிதும் நழுவ விட்டாரலர். "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் பழமொழிக் கேற்பவே சுவாமிகள் தம் உரனுடை உள்ளத்தால் தமிழ்மொழிக்கும், தமிழர்க்கும் இக்காலத்துக்கு ஏற்புடைய தொண்டுகளை உறுதிபெறச் செய்துவந்தார்கள். தமிழ் நாட்டில் முதன் முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவி நிலையை மேற்கொண்டு தங்நிலையிற்ருழாது இப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதியைச் செம்மை பெறநிகழ்த்திய அடிகளே இவண் தொடர்ந்து தொண்டாற்றவேண்டிய இயைபிருக்கவும் அவர்களது தொடர்பினை இப்பல்கலைக்கழகம் நெகிழவிட்டமை வருந்துதற்குரியதே. எனினும், சுவாமிகள் இலங்கை யரசினர் வேண்டுகோட்கிணங்கி இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராயமர்ந்து தமிழ்த்தொண்டாற்றி வருதல் நம்மனேர்க்கு ஆறுதலளிக்கும் நற் செய்தியாம். திருக் கயிலைக்குச் சென்று இளைத்துள்ள நிலையில் உடல் நலங் குறைந்த சுவாமிகள் தம் உடல் பொருள் ஆவி யனைத்தையுந் தொண்டிலீடுபடுத்திப் பிறரொருவரானுங் காணுதற்கரிய ஆராய்ச்சி உண்மைகளைக் கண்டுள்ளார்கள். விஞ்ஞானம், கணிதம், சங்கத்தமிழ், இசை ஆகிய இவற்றையெல்லாம் அறிந்தவர்கள் தாம் இந்த ஆராய்ச்சியைச் செய்யமுடியும். தமிழிசை ஆராய்ச்சி இங்குதான் தோன்றியது. சுவாமிகள் உலக இன்பங்களைத் தியாகஞ்செய்தார்கள். அவர்கள் மேனுட்டு மக்களின் நாகரிகத்தைநன்கறிந்தவர்கள். ஹோமர் ஷேக்ஸ்பியர் ஆகிய மேனுட்டுப் புலவர்களின் பாக்களை நன்கறிந்தவர்கள். வடமொழியிலும் வல்லுநர். தமிழையும் பழைய முறையில் நிறையக் கற்றவர்கள். ஆங்கிலத்திலும் அறிவுபடைத்தவர்கள், இத்தகைய பெரியாரின் படத்தைத் திறந்துவைக்க எனக்குச் சந்தர்ப்பம் அளித்த ஈழநாட்டிளைஞர் கழகத்துக்கு யானென் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்."

கழகத் தலைவர் திரு. க. கி. நடராஜன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுபெற்றது.

### வலிகாமம் மேற்குத் தலைமையாசிரிய (தமிழ்) சங்கம்

12–3–46-ற் கூடிய வலிகாமம் மேற்குத் தலைமையாசிரிய (தமிழ்) சங்கம் வலிகாமம் மேற்குப் பகுதிக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாகச் செல்ல விருப்பங்கொண்ட அபேக்ஷகர் எவராயினும் கீழ் வருவனவற்றை ஆதரித்துப் பூரணமாகச் சாதனையில் உழைப்பாராஞல் அவருக்கே மேற்படி சங்கம் தமது பூரண ஆதரவைக் காட்டுமென்று தீர்மானித்தது.

1. தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்ப பாடசாலைகளாக (Primary Schools) தொடர்ந்து நடைபெற உதவிபுரிதல்.

2. ஆங்கிலபாடசாலை ஆசிரியரின் [illegible] பெற உதவிபுரிதல்,




# மகளிர்

**த. சிவபாக்கியம்**
[திருநெல்வேலிச் சைவவித்தியாசாலை]

**பண்டைக் காலத்திலே** பெண்கள் சரிநிகர் சமானமாக வாழ்ந்துவந்தனர். தமிழ் நூல்களும் வரலாறுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன. ஆயினும் இந்தக்காலத்திற் பெண்கள் அடிமைகளாகவும் வீட்டுவேலை செய்வதற்குரிய பொம்மைகளாகவும் சுகபோக நலத்திற்குரிய யந்திரங்களாகவுமே கருதப்பட்டு வருகின்ருர்கள்.

எந்தநாடு எழில்பெற்று மிளிர வேண்டுமோ அந்தநாட்டுப் பெண்கள் முன்னேற்றமடைந்தவர்களாயிருத்தல் அவசியமாகும். இது பற்றியே நாடு முன்னேற்றமடைய வேண்டுமாஞல் வீடு முன்னேற்றமடைய வேண்டும் என்று ஆழ்ந்த அநுபவமுள்ள ஆன்ருேர் கூறுவர். பெண்கள் முன்னேற்றமடைவதென்ருல் என்ன? விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து தம்மை அலங்கரித்து இலங்குவதா? அன்றேல், வீட்டுப்பணிகளில் கவனமின்றி நவீன நாகரீகத்தைநாடி நடப்பதா? அன்று; அன்று. முன்னேற்றமடைவதென்ருல் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்து காலத்திற்கும் அந்தஸ்திற்கு மேற்றவாறு சிக்கன வாழ்வு வாழ்ந்து எவற்ருனும் நமக்கு முன் இந்நாட்டில் வசித்தவர்களிலும் பார்க்க எழில் மிக்க சீவியம் செய்து உண்மையான புகழையும் புண்ணியத்தையுமெய்துவதிற் கண்ணுங் கருத்துமாய் இயன்றவரையில் ஏற்றவை புரிதலென்றமையும். கணவன் அறிவிற் சிறந்தவனுயும் கீர்த்திமிக்கவனுயுமிருந்தாலும் மனைவி அறிவுடையவளாயிராவிட்டால் குடும்பம் சீர்கெட்டு மறைந்து விடும்.

பிறந்த—புகுந்த குடிகளுக்கும் நாட்டிற்கும் நற்புகழ் கொண்டு வரும் நங்கையரை ஆன்ருேர் குலமகளிர், அருட்பெண்டிர், தாயமகளிர், பத்தினியர், என்றும் மற்றும் பெண்களை விலைமகளிர், பொருட்பெண்டிர், மாயமகளிர், பொதுமகளிர் என்றும் கூறுவர். பெண்கள் கற்பென்னும் கலங்கா நிலைமையைப் பெற்ருல், அவர்களிலும் உயர்வாகிய பொருள் ஒன்றுமே இல்லை. "கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின் பெண்ணிற் பெருந் தக்கயாவுள?" என்ற வள்ளுவர் வாயுறை ஒன்றுமே இதற்குப் போதிய சான்ருகும். மாயமகளிரைப்பற்றி உலக நூல்கள் யாவும் பலவாறு இழித்துப் பேசுகின்றன. அவர்களால் உலக சமுதாயமே ஒழுக்கம் பிழைத்து வழுக்கிவிழுகிறது. பண்டைக் காலத்தில் உண்மையான அறிவைப்பெற்றிருந்த பெண்கள் கற்புக்கரசிகளாய், வீரத்தாய்மார்களாய் நாட்டின் முன்னேற்றத்தை நாடிய நடுநாயகங்களாய் விளங்கினரென்பது சரித்திரவாயிலாக நாமறிந்த பேருண்மையாகும். தற்காலத்தில் செம்மை சான்ற அரிவையரின் தொகையும் வகையும் குன்றியதன் காரணமாக உண்மைத் தேசாபிமானிகள் ஓலமிடுவதைக் காணகின்ருேமல்லவா?

கற்புடைமை, நாணம், அன்பு, சுயநலத்தியாகம் முதலிய அரும் பெருங்குணங்கள் ஆண்களைவிடப் பெண்களிடமே அதிகமாக உள்ளன. பெண்களைப்பற்றி காந்திஜி என்ன சொல்கிருர் பாருங்கள். "பெண்ணுரிமை விஷயத்தில் எனக்கு இன்னும் சமாதானம் ஏற்படவில்லை.....நான் மகனையும், மகளையும், சம அந்தஸ்துடனேயே நடத்துவேன்" "பெண் சுயநலத்தியாகத்தின் உருவம். பெண்ணைப் பலமற்ற ஜாதி என அழைப்பதே ஒரு சாபக்கேடு."

சீதை, சாவித்திரி, தமயந்தி, சந்திரமதி போன்ற பெண்மணிகளை இக்காலத்தும் நம்நாடு உதிக்கச் செய்வதற்கு ஏற்ற முறையில் நமது கலாசாலைகளிற் கல்வி கற்பிக்கவேண்டியது இன்றியமையாததாகும். போலித் தேசாபிமானிகளும், வெற்றுரைபேசித் திரியும் வீணர்களும், பெண்மையின் ஜீவனற்ற பெண்களும் இந்நாட்டினின்று அகலப்பண்டைக் காலப்பெருமை மீண்டும் இந்நாட்டில் மிளிரத்தக்கதாய் வரும் உதயகாலம் எவ்வளவு தூரத்திலுளதோ?


### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 13819

அளவெட்டி தற்போது
திருகோணமலை
சபாபதி கனகரத்தினம்
வழக்காளி

மல்லாகம்
இராமலிங்கம் சிந்தாமணி, அளவெட்டி தெற்கு காலஞ்சென்ற வீரகத்தியார் வல்லிபுரம்பிள்ளையின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 101ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரன் என்ற முறையில்
எதிராளி

மல்லாகம் றிக்வெஸ்ற் கோட்டில் 13-19-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1946-ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபா 250-ம், கோட்டுச் செலவு ரூபா 26-25 சதமும்.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டியிறை "குறுவலை" நெற்பரப்பு இருபத்தியொன்றரை ($21\frac{1}{2}$யும்) செய்பயிர் வான்பயிர்களும் வடக்கெல்லையி லிருக்கும் கிணற்றிற் பங்கும். எல்லை: கிழக்கு, நன்னித்தம்பி மகள் சின்னுச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு, பொன்னம்பலம் பெண் மாரிமுத்துவுக்கும், சபாபதி பெண் பொன்னுவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு, ஒழுங்கையும் பொன்னம்பலம் பெண் மாரிமுத்துவுக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

முற்பதிவு H $\frac{90}{265}$.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை 9-3-46

### புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்
**புதிய புடவைக் கூப்பன் புஸ்தகங்கள்**

215-வது புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தலின்படி 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ந் திகதி துவக்கம் வலுவுபெறும் கூப்பன்கள் பின்வருவன என்பதை வியாபாரிகள் தயவு செய்து கவனிப்பார்களாக.

பெரியவர்களுக்கான சீனியர் புஸ்தகத்தில் ஒரு புள்ளி பெறுமதியான S. 7-ம் இல்க்கமும் S. 10-ம் இலக்கமும்; இரு அரைப்புள்ளிகள் பெறுமதியான 22-ம் இலக்கக் கூப்பனும். சிறுவர்க்கான யூனியர் புஸ்தகத்தில் ஒரு புள்ளி பெறுமதியான J. 10-ம் இலக்கமும், இரு அரைப்புள்ளிகள் பெறுமதியான 20-ம் இலக்கமும்.

மேற்சொன்னவையன்றி ஒவ்வொரு புஸ்தகத்திலுமுள்ள 1-ம் 2-ம் 3-ம் இலக்கங்களல்ல என்பதை வியாபாரிகள் அவதானிப்பார்களாக.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி.
கொழும்பு, 9-3-1946. [2679]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு

பொ. பாலசிங்கம்

கமலாவதியை மணம்முடித்த ஆறுவது மாசத்திலேயே, தியாகராஜனுக்குப் பொருளீட்ட வேண்டுமென்ற ஆசை உதித்துவிட்டது. மாமனார் சின்னையா மலாயாவுக்குச் சென்று உத்தியோகம் பார்த்தவர். இப்போது “பென்சன்” பணத்திற் சீவிப்பவர். இதனால் தியாகராஜனுக்குத் தானும் மலாயாசென்று ஏதும் உத்தியோகம் பார்ப்பதுதான் நல்லது என்று தோன்றிற்று. மாமனாருக்கும் இது பிடித்தது. தியாகராஜன் பிரயாணத்திற்கு ஆயத்தமானான். கமலாவதி பிரயாணஞ் செய்யக்கூடாதென்று அவள் பெற்றோர் தடுத்துவிட்டனர். அவள் பெற்றோருடன் இருந்தால் பிரசவ காலத்திற்கும் எவ்வளவோ உதவியாயிருக்குமென்று தியாகராஜனும் அவளை விட்டுப் பிரயாணத்திற்குக் கிளம்பினான். அவனின் உற்ற நண்பன் நடராஜன் அவனைப் பயணமனுப்பிவைக்கச் சென்றான்.

கப்பல் புறப்படுவதற்குத் தயார்! “நடா” எனக்கு வேண்டும் பொழுதெல்லாம் நீ எவ்வளவு உதவிகளைச் செய்தாயோ அதுபோல் கமலாவதிக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்.” “ஓ! நீ சொல்லாமலே...... ஆனால் பிரசவம் முடிந்ததும் கமலாவை நீ அழைத்துச் செல்லவேண்டும்.”

“தடையென்ன? நான் சொன்னவற்றை மாத்திரம் நீ கவனமாகப் பார்த்துக்கொள்.”

அன்பர்கள் விடை பெற்றுக் கொண்டனர்.

கப்பலுங் கடலைக் கிழித்துக் கொண்டு சென்றது.

தியாகராஜன் மலாயாவில் உத்தியோகமொன்றைத் தேடிப் பிடிப்பதற்கும் காலம் அவ்வளவு தாமதமாகவில்லை. கமலாவதிக்கும் தியாகராஜனுக்கும் இடையிற் கடிதப் போக்குவரவு நடந்துகொண்டுதான் இருந்தது. ஒருமுறை தியாகராஜன் தனக்கு ஒரு மகன் பிறந்திருப்பதாக ஒரு நற்செய்தியை வரவேற்று மகிழ்ந்தான். அவனின் சந்தோஷம் கரைகடந்துவிட்டது. தன் மனைவியை அழைப்பதற்கேற்ற காலம் வந்துவிட்டதென்று பேருவகை எய்தினான். தன்னுடைய செல்வ மகனின் தோற்றத்தைத் தன்னுள்ளே படம் பிடித்துப் பார்க்கலானான்.

கமலாவை விரைவில் மலாயாவுக்கு அனுப்பி வைக்கும்படி மாமனாருக்கும் நண்பன் நடராசனுக்கும் கடிதம் எழுதிவிட்டான். கமலாவுக்கு ஒரே சந்தோஷம். கணவனைப் பார்ப்பதற்கு அவள் மிகவும் ஆவல் கொண்டாள். பயணத்திற்குரிய நாளும் குறித்தாய்விட்டது. தன் குழந்தையைக் கணவனுக்குக் காட்டவேண்டுமென்ற ஆசை அவள் மனதிற் பொங்கித் ததும்பியது. தந்தை மகனைக் கையிற்பெறுங் காட்சியைக் காணத் தவித்தாள்.

* * *

இதற்கிடையில் ஜப்பானியர் மலாயாவுக்குள் நுழைந்துவிட்டனர். சிங்கப்பூரில் யுத்தம்: யப்பானியர் தெற்குநோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். பத்திரிகைகளில், இவ்விஷயத்தைக் கமலாவதி படித்து ஏங்கிவிட்டாள். சிங்கப்பூரைவிட்டு ஒரு, கப்பல் புறப்படுகிறதென்றும் அதிலேதான்வருவதாகவும் தியாகராஜன் ‘ஏயர் மெயில்’ மூலம் ஒரு கடிதம் போட்டிருந்தான். தன் கணவன் வருகிறனென்று கமலாவதி மனந் தேறினாள். ஆனால் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்ட ஒரு கப்பலை யப்பானியர் ஆழ்த்திவிட்டனர் என்ற செய்தி கமலாவுக்கு எட்டிற்று. யாழ்ப்பாணத்தவர்களும் அதிலிருந்தனரென்று தெரிந்தது. கமலாவதியாற் பேசவும் முடியவில்லை.

நாட்கள் பல சென்றன. கமலாவதியைத் துக்கம் வாட்டிற்று. அவள் உருவம் இப்போது முற்றிலும் மாறிவிட்டது. கண்ணீர் விடுவதினால் ஒளியிழந்து மங்கிப்போன கண்கள், கவலையால் வாடிவதங்கிய முகம்; கமலாவதி ‘சதா’ உருகிக்கொண்டே வந்தாள்.

இரண்டு வருடங்கள் பறந்தோடின.

“கமலா! இன்றுந்தான் நீ துக்கம் நிரம்பியவளாக, காணப்படுகின்றாய். இனிமேலும் இப்படி இருப்பாயாயின் நான் இங்கு வருவதைக்கூட நிறுத்திவிடுவேன்” என்று ஒருநாள் தனியேயிருந்த கமலாவதியைப் பார்த்துக்கொண்டே கூறினான். நடராஜன்.

“நடா! எனக்கு இந்த உடம்பைப்பற்றி என்னதேவையிருக்கிறது. நான் யாருக்காக இந்த உடம்பைப் போற்றவேண்டும். கணவனை இழந்தேனென்றிருந்த எனக்குச் சிறிது ஆறுதலளித்த குழந்தைகூட இறந்துவிட்டது. இவைகள் போதாதென்று, நீ இங்கு வருவது போவதைப்பற்றி ஊரவர்கள் கூறும் வார்த்தைகள், எரிகிற நெருப்பில் நெய்யூற்றுவதுபோல எனக்கிருக்கின்றன. இதைவிடத்துக்கம் வேறென்ன? எதற்காகத் துக்கப்படவேண்டும்?”

நடராஜன் கமலாவதிக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறான். அவள் குழந்தை வருத்தமாகப் படுத்திருந்தபோது அவன் பட்டபாடு கொஞ்சமல்ல. சிறுவன் உயிரைப் பாதுகாக்கலாமென்று நடராஜன் பட்ட சிரமத்தைக்கண்டு கமலாவதிகூட ஆச்சரியப்பட்டாள். அதிலிருந்து அவளுக்கு நடராஜன்மீது மதிப்பும் அன்பும் இருக்கத்தான் செய்தது. ஊராரின் வசைமொழிகளைக் கூடப் பொருட்படுத்தாது, அவன் செய்யும் உதவிகளைக்கண்டு கமலாவதி பிரமித்துப்போனாள். தன்மீது கொண்ட அன்பினாலேதான் தனக்காக நடராஜனுக்கு இவ்வளவு பாடு என அவளுக்குத் தெரிந்தது. அவள் கூறிய கடைசி வார்த்தைகள் நடராஜனின் உள்ளத்தை உறுத்தின.

“கமலா! நான் ஊரவர்களுடைய போற்றலுக்கும் தூற்றலுக்கும் செவி கொடுப்பதில்லை. அதனாலேதான் இன்றும் இவ்விடம் வருகின்றேன். இன்றும் நான் இங்கு வருவதும் போவதும் தியாகராசனுக்காகத்தான். இனிமேல் நான் இங்கு வராமல் விட்டால் ஊரவர்களும் கதைக்க மாட்டார்கள்” என்று சொல்லிக்கொண்டே ‘விர்’ என்று நடந்தான்.

“நடா! நடா!” என்று கத்திக்கொண்டே கமலாவதி ஓடிப்போய் முன்னுக்கு மறித்தாள்.

நடராஜன் பேசாமற்போய்க் கதிரையில் உட்கார்ந்தான். கமலாவதி அவன் முகத்தைப்பார்த்தாள்: அவன் கண்களில் நீர் பொங்கிவழிந்துகொண்டிருந்தது.

“கமலா! நீ இப்படித்தான் எப்பொழுதும் இருந்து காலத்தைக் கழிக்கப் போகிறாயா?” என்று கேட்டான் நடராஜன்.

“பின் என்ன செய்வது. எனது விதியை நான் தானே தொலைக்கவேண்டும்.”

“துக்கப்பட்டால் விதி தொலைந்து போமா? இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்புதானே.”

“இல்லை நடா! என் வாழ்வில் அப்படியல்ல. எனது வாழ்விலே இனிமேல் இன்பமென்பதையே காணமுடியாது.”

“கமலா! ஏன் இன்பத்தைக் காணமுடியாது. விதியை மதியாலும் வெல்லலாமல்லவா. நீதானே எப்பொழுதும் துன்பத்தை வரவழைத்துக்கொண்டிருக்கிறாய். சுகமாக வாழவேண்டும் என்று உனக்குத் தோன்றுவதில்லையா?”

“ஏன் தோன்றுவதில்லை. நானும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவள் தானே!”

“அப்படியானால் நீ துன்பத்தைத் தொலைக்கத்தானே வேண்டும்!”

“அதற்கு வழி?”

“நீ உன் வாழ்வைப் புதுமையாக்கவேண்டும். அதுதான் உன் துக்கம் அகலுவதற்குச் சிறந்த வழி.”

“மறுபடியும் அ[illegible]விற்கு.........” கமலாவால் பேச முடியவில்லை. கட்டிலின் மீது முகங் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

“கமலா! நீ தொட்டதெல்லாவற்றிற்கும் அழுது கொண்டுதான் இருக்கின்றாய். உனது விருப்பத்தை அறிய விரும்புகின்றேன். எல்லாவற்றையும் யோசித்துச் செய்” என்று கூறிவிட்டு நடராஜன் போய்விட்டான்.

* * *

கமலாவதிக்கு அன்று இரவு முழுதும் நித்திரையில்லை. படுக்கையிற் புரண்டு புரண்டு கிடந்துகொண்டே தன் வாழ்வைப் பற்றி யோசிக்கலானாள். ‘வாழ்வைப் புதுமையாக்கவேண்டும்’ என்று நடராஜன் கூறிய அச்சொற்கள் அவளின் காதுகளில் ஒலித்தன. நடராஜன் தன்மீது கொண்டிருக்கும் அன்பை ஒருநாளும் மறக்கவே முடியாது என்று தோன்றிற்று அவளுக்கு. ‘பைத்தியமே! உனக்கு வயது சென்றுவிட்டதா? உனது அருமையான இளமையை ஏன் வீண்போக விடுகின்றாய். துன்பத்தில் எவ்வளவு காலத்தைத்தான் கழிக்கப் போகின்றாய்? நடராஜன் உன் நன்மைக்காகவே பாடுபடுகின்றான். அவன் உனது துக்கத்தை ஆற்றவே தெண்டிக்கிறான். அவன் உனக்குக் கெடுதியை நினைப்பானென்று எண்ணிவிடாதே.” என்று அவள் உள்ளஞ் சொல்லியது.

என்ன விதப்பட்டும் கமலாவதியின் துக்கத்தை ஆற்றியே தீரவேண்டும் என்று நடராஜனுக்குத் தோன்றிற்று. மறுநாள் கமலாவதியிடம் சென்றான். “கமலா! துன்பத்தை யனுபவிக்கத்தான் விரும்புகிறாயா என்ன?”

“இன்பத்தை யாரும் வேண்டாமென்று தள்ளுவார்களா?” என்றாள் கமலா.

நடராஜனின் முகம் பிரகாசமடைந்தது.

கமலா வெளியே எதையோ பார்த்துக்கொண்டு யோசித்த வண்ணமாக இருந்தாள். மரமொன்றின்மீது இரு குருவிகள் கலகலத்துக்கொண்டிருந்தன.

கமலாவதிக்கு மறு விவாகம் நடந்தேறிவிட்டது. நடராஜனுடன் மறுபடியும் வாழ்க்கைப் படகை யோட்டுகிறாள். பழைய நினைவுகள்—துக்கங்கள் தோன்றித் தோன்றி மறைகின்றன. ‘ஊரவர்கள் இனி எப்படிச் சொன்னாலென்ன சொல்லட்டும்’ என்றுவிட்டு இருக்கிறாள் கமலாவதி. நாட்கள்—மாதங்கள் பல சென்றுவிட்டன. ஆண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள். நடராஜன் குழந்தைக்கு, தியாகராஜன் என்று பெயர் வைத்தான். அவள் மறுமுறையும் கர்ப்பவதி யாகிவிட்டாள்.

* * *

சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு யப்பானியரால் மாட்டப்பட்ட அந்தக் கப்பலில் தியாகராஜன் இல்லையென்பது சின்னையாவுக்கோ மற்றவர்க்கோ எப்படித் தெரியப் போகின்றது? அவன் கப்பலேறுவதற்காகப் புறப்பட்டு வந்தான். ஆனால் அவன் துறைமுகத்தைச் சேருவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன்னாலேயே கப்பல் புறப்பட்டுவிட்டது. மனைவிக்கோ தான் வரவில்லையென்பதை அறிவிப்பதற்கு அவனால் வசதிஏற்படாமற்போய்விட்டது.

என்று நேசவல்லரசினர் திரும்பவும் மலாயாவைக் கைப்பற்றினரோ அன்றே அவன் வாழ்வு சோபித்தது. அவன் அந்த நாலு வருடங்களாகப் பட்ட துன்பமெல்லாவற்றையும் மறந்தான். அவன் கண்முன்னே மனைவியும் மகனும் தோற்றமளித்தனர். கப்பற்போக்குவரவைப்பற்றி விசாரித்தான். அடுத்தகிழமை ஒரு கப்பல் கொழும்புக்குப் புறப்படவிருந்தது. பிரயாணத்துக்கு ஆயத்தமானான்.

* * *

“எப்படி சுகந்தானே?” என்று சொல்லித் தியாகராஜன் மாமன் மாமி முன் நின்றான். அவனை வரவேற்கவோ அல்லது அவனுடன் ஏதாவது பேசவோ அவர்களால்முடியவில்லை. தியாகராஜனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வீட்டுக்குள்ளிருந்து அப்பொழுதுதான் வெளியில் வந்த நடராஜன் தியாகராஜன் அங்கு நிற்பதைக்கண்டு திடுக்கிட்டான். அவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தான் காணுவது கனவுதானா என்று கூட நினைத்தான். எங்கு நிற்கிறனென்பது கூட அவனுக்குத் தெரியவில்லை. தன் நிலையழிந்தவனாய்ப் பேசாமல் நின்றான். நடராஜன் அங்கு நிற்பதைக்கண்ட தியாகராஜன் அவனிடம் ஓடிவந்து, “நடராஜா! என்ன நடந்துவிட்டது. ஏன் எல்லோரும் பேசாமல் நிற்கிறீர்கள்? கமலா எங்கே? குழந்தையெங்கே?” என்று பதைபதைத்துக்கொண்டே கேள்விகளை அடுக்கினான். நடராஜனுக்குத் தொண்டை கட்டிக்கொண்டது. தியாகராஜன் அவன் தோள்களைப் பிடித்து அசைத்துக்கொண்டே “நடராஜ்! என்ன நடந்துவிட்டது? கமலா எங்கே? இறந்துபோய்விட்டாளா? என்று பதைபதைப்புடன் கேட்டான்.

‘மன்னிக்கவேண்டும்’ என்றான் நடராஜன்.

“மன்னிப்பு? நம்பிக்கைத் துரோகத்துக்கு மன்னிப்பா? என்று தியாகராஜனின் வாய் முணுமுணுத்தது.

“இல்லை! நம்பிக்கைத் துரோகமில்லை” என்று கத்தினான் நடராஜன். “சிங்கப்பூர்ச் சண்டை தொடங்கியபோது நீ கப்பலில் புறப்பட்டாய். அந்தக் கப்பல் யப்பானியரால் ஆழ்த்தப்பட்டது. நீ இறந்துவிட்டாயென்று...”

மண்டியிட்டு அவன்காலடியில் கிடந்த நடராஜனைத் தூக்கினான். தேம்பித் தேம்பி யழுத நண்பனைத் தியாகராஜன் தேற்றினான். சவம்போலப் படுக்கையிற் கிடந்தாள் கமலாவதி. அவளின் மயக்கம் சிறிது சிறிதாகத் தெளிவடைந்தது. அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். தியாகராஜனும் நடராஜனும் பக்கத்தில் நின்றனர். அகன்று விரிந்து அவள் கண்கள் தியாகராஜனை நோக்கின. அப்பார்வையில் அவனிடம் மன்னிப்புக் கோருவது போன்றிருந்தது.

கடவுள், கமலாவதியை மேன்மேலும் சோதிக்கவிரும்பவில்லை. கமலாவதியின் கடைசிமூச்சு அங்கு நின்றவர்களின் உள்ளங்களை ஊடுருவிப் பாய்ந்தது.

* * *

தியாகராஜன் மறுபடியும் தனது பிரயாணத்தை ஆரம்பித்தான். ஆம்! அவன் இனி யாருக்காக இருக்கவேண்டும்? மனைவியையும் மகனையும் அழைத்துக்கொண்டு போகலாமென்று வந்தான். அன்று அவனது பிரிவாற்றாமல் மனைவி வருந்தினாள். பயணமனுப்ப நடராஜன் கூடிக்கொண்டு வந்தான். ஆனால் இன்று? அவன் தனித்தவனே தனித்தவன் தான். தியாகராஜன் சமுத்திர அலைகளைப் பார்த்துக்கொண்டே கப்பலுள் இருக்கிறான். கப்பல் சோககீதத்தை இசைத்துக்கொண்டே செல்லுகிறது. * * *

அதோ! அந்தக் குடிசையில் சில சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும் — இளஞ் சன்னியாசியைப் போன்றிருக்கும் அவன்யார்? எதற்காக அவன் முகம் சோபையற்றிருக்க வேண்டும்? ஒருவேளை அவன்தான் நடராஜனோ?





## — ஒவ்வொன்று எவ்வளவு செலவுள்ளது

ஆம். இம்மாதிரியாகச் செய்ய விடுவீர்களானால் அந்த வண்ணான் உங்களை நஷ்டத்திற்குள்ளாக்குவான். இந்தக்காலத்து விலையில், அவன் கிழிக்கும் பொருள்களுக்குப் பதிலாக வாங்குவதற்கு உங்களுக்கு எவ்வளவு செலவாகுமென்பதை யோசித்துப்பாருங்கள். அவனின் நாசமாக்கும் முறையை இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டாம். ஆடைகளையும், வீட்டு உடைகளையும், சிறிதளவேனும் பழுது ஏற்படும் என்ற ஐயமின்றி, ‘சன்லைட் சோப்பை உபயோகித்து மிச்சம்பிடிக்கும் முறை’யால் அழகாகத் தோய்த்துவிடமுடியும். அது ஒரு மிருதுவான முறை; அடிக்கத்தேவையில்லை; கடினமாகத் தேய்க்கவேண்டியதில்லை கீழே குறிப்பிட்டிருக்கும் சாதாரண விவரங்களை வாசிக்கவும்.

### உங்கள் வேலைக்காரனுக்குச் ‘சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும்’ முறையைக் கற்பியுங்கள்



1. ஆடைகளைத் தண்ணீரில் நன்றாக ஊறவையுங்கள்.
2. ஆடைகள்மீது — அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்றாகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்கவேண்டாம். சன்லைட்டின் ‘சுய ஆற்றலுள்ள’ நுரை அழுக்கை இளக்கிஎடுத்துவிடும்.
4. நன்றாக அலசிக்கழுவவும். அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறபடியால் அலசிக்கழுவிவிடவும். நன்கு அழுக்கடைந்த ஆடைக்குத் திரும்பவும் சோப் போடவேண்டும்




# சன்லைட்சோப்

ஆடைகளைப் பாதுகாக்கின்றது


S. 73-169 LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY
# THE EELAKESARI
Largest and most Influential Circulat ion in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday March, 17, 1946 | No. 33

## நற்சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2660]

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணப் பட்டினப் பகுதி (தமிழ், ஆங்கிலம்) பாடசாலைகளின் பேச்சுப்போட்டி 23-3-46 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் திரு. சு. நடேசபிள்ளை M. S. C. அவர்களின் தலைமையில் நடைபெறுமென யாழ்ப்பாணத்தமிழ் ஆசிரியர் சங்கத்துக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையில் கூடப்படும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் காலஞ்சென்ற வல்வெட்டித்துறை சரவணமுத்து சோமசுந்தரத்தின் உரிமைத்தத்துவ 224/P. T. இலக்கவழக்கில் குறித்த கோட்டாரால் 1946-ம் ஆண்டு மாசிமாதம் 7-ந் திகதியைக்கொண்ட எனக்குக்கிடைத்த கொமிசன் கட்டளையின் பிரகாரம் 1946-ம் ஆண்டு பங்குனிமாதம் 30-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் கீழ் விபரிக்கப்படும் 10-ம் ஆதனத்தைத்தவிர்ந்த ஏனைய ஆதனங்களையும் அன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த 10-ம் ஆதனத்தையும் அவ்வாதனமிடமாக நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

குறித்த உருமைத் தத்துவ வழக்கில் தத்துவகாரன் வல்வெட்டித்துறை சோமசுந்தரம் சோதிலிங்கம்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டித்துறையிறை ஆனைவிழுந்தான் வீடு 1 மேற்படி நிலப்பரப்பு $9\frac{1}{4}$ கூடிய நிலப்பரப்பு 9 குளி $10\frac{1}{2}$ இதில் வடக்குப்புறமாக $\frac{1}{4}$ பங்குக்கு நிலப்பரப்பு 2 குளி $7\frac{1}{8}$ இதில் $\frac{1}{4}$ பங்குக்கு குளி 11 எல்லை: கிழக்கு, மு. விசுவலிங்கத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு பொன்னையா கந்தசாமிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு பொன்னுச்சாமி பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு கை ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்டவைகள் அடங்கலும்.

2. மேற்படி வல்வெட்டித்துறையிறை ஆனைவிழுந்தான் வீடு 1 மேற்படி நிலப்பரப்பு $4\frac{1}{2}$. இதில் கிழக்குப் புறமாக மூன்றில் இரண்டு பங்குக்கான நிலப்பரப்பு 2 குளி $6\frac{1}{2}$ யில் குளி $6\frac{1}{16}$ எல்லை கிழக்கு கந்தசாமி பெண் தங்கப் பொன்னுவுக்குடையவாதனம் வடக்கு கையொழுங்கையும் ஐயாமுத்து கைம்பெண் பொன்னம்மாவுக்குடைய வாதனம். மேற்கு, கையொழுங்கையும், தம்பிப்பிள்ளை பெண் அன்னமுத்துவுக்குடைய ஆதனம். தெற்கு, கையொழுங்கை. இது அடங்கலும்.

3. மேற்கூறிய 2-ம் ஆதனமாகிய நிலப்பரப்பு 2 குளி $6\frac{1}{2}$ யில் $2\frac{1}{2}$ குளி நிலமும் கிணறும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை: கிழக்கும், வடக்கும், கணபதிப்பிள்ளையின் பெண்சாதிக்குடையவாதனம். மேற்கும், தெற்கும், கந்தசாமி பெண் தங்கப்பொன்னுவுக்குடையவாதனம் இதில் அரைவாசியில் மூன்றிலொரு பங்கு.

4. மேற்படி வல்வெட்டித்துறையிறை வித்தனை நிலப்பரப்பு $2\frac{1}{2}$ மேற்படி நிலப்பரப்பு $\frac{1}{2}$ ஆனால் அளவின்படி நிலப்பரப்பு 3 குளி $1\frac{5}{6}\frac{4}{4}$ இதில் ஒழுங்கைக்கு விடப்பட்ட 7 குளி நிலம் பிறநீங்கலாக மிகுதியில் வடக்குப்புறமாக மூன்றில் இரண்டு பங்குக்கான நிலப்பரப்பு 1 குளி $14\frac{1}{3}\frac{7}{2}$ இதில் மேற்கரைவாசிக்கு குளி $16\frac{17}{64}$ எல்லை: கிழக்கு, S. செல்லத்துரைக்குடையவாதனம். வடக்கு, பின் சொல்லப்படும் 5-ம் ஆதனமும் ஒழுங்கையும். மேற்கு, சரவணமுத்து சோமசுந்தரத்தின் உருமைக்காரருக்குடைய வாதனம். தெற்கு, செல்லத்துரை பெண் அம்மிணிப்பிள்ளைக்குடைய வாதனம் மறு ஆதனமும் இதில் சொரியலாக $\frac{3}{24}$ பங்கு.

5. மேற்கூறிய 4-ம் ஆதனத்தில் கழித்துவிடப்பட்ட 7 குளிக்கு எல்லை: கிழக்கு, பொன்னுச்சாமி கைம்பெண் சின்னமாமயிலுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு, இரகுநாதபிள்ளை தியாகராசாவுக்குடைய வாதனம். மேற்கு, ஒழுங்கையும், சின்னையா செல்லத்துரைக்குடைய வாதனம். தெற்கு 1-ம் ஆதனமும் S. செல்லத்துரைக்கும், செல்லையா பெண் தங்கப்பொன்னுவுக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கிணறு அடங்கலில் சொரியலாய் இருபத்துநாலில் மூன்றுபங்கு.

6. மேற்படி வல்வெட்டித்துறையிறை ஆனைவிழுந்தான் நிலப்பரப்பு $\frac{5}{8}$ எல்லை கிழக்கு சரவணமுத்து சோமசுந்தரத்தின் உரிமைக்காரருக்குடைய வாதனம். வடக்கும், மேற்கும் ஒழுங்கை. தெற்கு செல்லத்துரை பெண் அம்மிணிப்பிள்ளைக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் கல்வீட்டில் வடக்கறையும் அவ் வடக்கறைக்கு அடுத்த வடக்குப்புறமாக இருக்கும் கூடமும் அதைச் சேர்ந்த விறாந்தையும் வீட்டிற்கு எதிரேயிருக்கும் மண்டபத்தில் வடக்கரைவாசியும், வடக்கே கிழக்கு மேற்காக இருக்கும் அடுக்களையில் கிழக்கறையும், அக்கிழக்கறைக்குரிய விறாந்தையும், கிணற்றில் தெற்கரைவாசியும், தெற்கரைவாசிக் கிணற்றுக்குரிய முழுப்பத்தலும், தொட்டியும் நிலத்தில் சொரியலாய் அரைவாசியும்.

7. மேற்படி வல்வெட்டித்துறையிறை முத்திரைக் கட்டையடி நிலப்பரப்பு $12\frac{1}{2}$ இதில் நிலப்பரப்பு 2 குளி $16\frac{1}{2}$ ஆட்சிப்படியும் அளவின்படியும் நிலப்பரப்பு $4\frac{1}{2}$ எல்லை: கிழக்கு, மாணிக்கவாசகம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்கும் உடையவாதனம். வடக்கு துரைசாமி பெண் மனோன்மணியம்மாவுக்குடையவாதனம். மேற்கு கனகசுந்தரம் பெண் சிவகாமிப்பிள்ளைக்குடைய வாதனமும். தெற்கு ஒழுங்கையும் சவரிமுத்து பெண் அன்னம்மாவுக்குடைய வாதனம் இதில் $\frac{3}{7}$ பங்கு.

8. மேற்படி வல்வெட்டித்துறையிறை வித்தனை நிலப்பரப்பு $8\frac{3}{4}$ எல்லை: கிழக்கு, குழந்தைவேலு பெண் கோசலையம்மாவுக்குடையவாதனம். வடக்கு ஒழுங்கையும், இராமுப்பிள்ளை மாணிக்கத்துக்குடைய வாதனமும். மேற்கு தாமர்-சின்னத்தம்பிக்கும், முருகுப்பிள்ளை-செல்வவிநாயகத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு சின்னையா செல்லத்துரைக்குடைய வாதனம். இதில் நிலப்பரப்பு 1.

9. மேற்படி வல்வெட்டித்துறையிறை வித்தனை நிலப்பரப்பு 3 குளி $6\frac{13}{16}$ இதில் தெற்குப்புறமாக நிலப்பரப்பு 3 குளி $1\frac{3}{16}$ எல்லை, கிழக்கு K. வயித்திலிங்கம்பிள்ளையின் உருமைக்காரருக்குடைய வாதனம். வடக்கும் மேற்கும், சரவணமுத்து சோமசுந்தரத்தின் உரிமைக்காரருக்குடைய ஆதனம். தெற்கு, M. அருணசலத்தின் உருமைக்காரருக்குடைய வாதனம். இதில் அரைவாசி.

10. தையிட்டியிறை மாத்தான் ஊரிக்காடு நிலப்பரப்பு 4 குளி $7\frac{7}{8}$ எல்லை: கிழக்கு, நாகலிங்கேஸ்பரமடாலயம் என்னும் கோயிலுக்குரியவாதனம் வடக்கு அம்பலவாணர் சிதம்பரப்பிள்ளைக்குடைய வாதனம். மேற்கு, அமரிக்கன் மிஷனருக்குடையவாதனம். தெற்கு, தெரு. இதில் சொரியலாய் அரைவாசி.

11. மேற்படி வல்வெட்டித்துறையிறை வித்தனை நிலப்பரப்பு $14\frac{1}{2}$ ஆனால் 1243-ம் இலக்கப்படத்தின்படி நிலப்பரப்பு 14, குளி $9\frac{1}{8}$ இதில் குறித்த படத்தில் 4-ம் நெம்பர் துண்டுக்கு நிலப்பரப்பு 3 குளி $1\frac{3}{16}$ எல்லை, கிழக்கு, ச. சோமசுந்தரத்தின் உருமைக்காரருக்குடைய வாதனம். வடக்கு, K. விவேகானந்தாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு, M. வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு, முருகேசு பெண் பூரணத்துக்குடைய வாதனம் இவை அடங்கலும்.

V. M. Kandasamy
வெங்கீஸ்மேஸ்தர்

வல்வெட்டித்துறை
26-2-46 [2677]

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## 217-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல்
### பிரத்தியேக கூப்பன்கள் வழங்குதல்

புடவை வரத்துக் குறைந்து போனமையால் பின்வரும் எக்காரணங்களுக்காவது பிரத்தியேக கூப்பன்கள் வழங்குதலை நிறுத்தவேண்டியிருப்பதைக் குறித்து வருந்துகிறோம். ஆனபடியால் அக் காரணங்களுக்காகப் பிரத்தியேக கூப்பன்கள் வழங்கப்படமாட்டாது.

வியாபாரதலங்களின் தேவைகள்
முடி வெட்டுநர் (Barbers)
தட்டுமுட்டுத் தளபாடங்கள்
புஸ்தகக் கட்டுவேலை
"பராயம் அடைதல்" (உடைமாற்றுவதற்குரிய வயதுகள் உட்பட)
குடை பழுது பார்த்தல்
சாரணச் சிறுவர்
சந்நியாசிகள்; கன்னிகாஸ்திரிகள் முதலிய துறவறநிலையிலுள்ளவர்கட்குரியவிசேஷஉடைகள்.
எல்லா மரணங்கள்
போசனசாலைகள், சத்திரங்கள்
வாடி வீடுகள்
நிலைபரமாற்றமும் பாடசாலைக்குப் போகும் பிள்ளைகளும்.

2. மேற்சொல்லப்பட்ட எக்காரியங்களுக்காவது விண்ணப்பித்தவர்கட்கு இவ் அலுவலகத்திலிருந்து மறுமொழி அனுப்பப்படமாட்டாது.

3. இவ்வளவுகாலம் மற்றக் காரணங்களுக்குக் கொடுத்த பிரத்தியேக கூப்பன்களிலும் குறைத்தே கொடுக்கப்படும்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 6-3-46. [2677]

## சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த ஜயந்திவிழா

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஸ்ரீ ராமகிருஷ்ண - விவேகானந்த ஜயந்திவிழாவை இம்மீ 9உ சனிக்கிழமைபிற்பகல் கொண்டாடிற்று. அதிபர் ஸ்ரீ T. முத்துக்குமாரு B. A. தலைமை வகித்தனர். ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தர், நியாயவாதி ஸ்ரீ K. சண்முகம், வித்தியாதரிசி ஸ்ரீ M. இராசசுந்தரம் ஆகியோர் குருவும் சிஷருமான இரு அவதார புருஷர்களைப்பற்றிச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர். இசைக்கச்சேரியும் நிகழ்ந்தது கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ T. சுப்பிரமணியம் B. A. அனைவருக்கும் நன்றி கூறினர். தேவாரத்துடன்விழா இனிதுநிறைவேறியது.

## தேக புனிதத்திற்காக
### — எந்தெந்தக் காலத்திலும்

தேகதுர்நாற்றம் (B. O.) உண்டாவதற்குக் காரணமானதும், தேகபுனிதத்தின் எதிரியுமான—கெட்ட வியர்வையிலிருந்து சருமதுவாரங்களைக் காப்பாற்றுவதற்காகவே லைவ்போய் டொயிலட் சோப்விசேஷமாகத்தயாரிக்கப்பட்டது




# லைவ்போய்
# டொயிலெட் சோப்

LEVER BROTHERS (CEYLON) LIMITED

# SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

## சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்ரி ரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2658]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 மார்ச் 17உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org